REGISTERED NO. M. 1434, தனிப்பிரதி அணா 2

# நாடார்குலமித்திரன்

# THE NADAR KULA MITRAN.

அருப்புக்கோட்டை நாடார் கல்விப் பிரசங்க சபையினின்று

வெளிவரும்,

மாதம் மும்முறைப் பதிப்பு.

"கண்ணுடைய ரேன்பவர் கற்ரோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர்" (திருக்குறள்)

சுதந்தரம்! சமத்துவம்!! சகோதரத்வம்!!!

பத்திராதிபர், சு. ஆ. முத்துநாடார் பத்திராசிரியர்

நாடார்குல மித்திரன்.
சந்தா விபரம்.

இந்தியா, பர்மா, சிலோன் முதலிய உள்நாட்டிற்கு வருடம் 1-க்குரு 3-8-0.
சிங்கப்பூர், பினங்கு, மலாக்கா முதலிய வெளிநாட்டிற்கு வருடம் 1-க்கு ரூபா 4-0-0.

நாடார்குல மித்திரன்.
விளம்பர விகிதம்.

கலம் 1-க்கு தடவை 1-க்கு ரூபா 6-0-0,
சில்லரை விளம்பரம் அங்குலம் 1-க்கு ரூ 0-4-0
நீண்டகாலம் விளம்பரஞ் செய்வோர் மானேஜருக்கு எழுதவும்.

மலர் 4.] துந்துபிஹு கார்த்திகைமீ 16உ வெள்ளிக்கிழமை (அருப்புக்கோட்டை) 1922ஹு டிசம்பர்மீ 1உ [இதழ் 10

## சௌந்தரகாந்தி.

இது ஒரு

புதிய நாவல்! இனிய நாவல்

மதியைவிளக்கி மகிழ்ச்சியைத் தரும் நாவல்!!!

[இஃது திருமலையப்பபுரம், பா. பி. இரத்தினபாண்டிய ரவர்களால் எழுதப்பெற்றது.]

பாண்டிய பரம்பரையைப்பற்றியும், பாண்டிய மன்னர்களின் ஆட்சி முறையைப்பற்றியும் தெளிவாய் நாவல்ரூபமாய், சொற்சுவைபொருட்சுவையோடுமுதல்முதல் வெளிவந்த தமிழ் நாவல்இதுவே. கற்ரோரும், மற்ரோரும் கவிர்து கொண்டாடப்பெற்றது. ஆண், பெண் இருபாலருக்கும் அருமையான பெருமையைத்தரும் பேர்பெற்றது. படிக்க புத்தியையும், பார்க்க வித்தையையும் தரும் சக்திபெற்றது. ஆசிரியர் படத்தோடும் கூடியது.

இதன் விலை அணா 12, தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

நாடார்குலமித்திரன் ஆபீஸ்,
அருப்புக்கோட்டை.

## ஜீவரத்னம்

ஜ்வரங்கள், இருமல், கபம், காஸம், க்ஷயம், ஆஸ்த்மா, குன்மம், அஜீரணம், வயிற்றுவலி, மந்தம், காலரா, பிளேக், தேகத்திலுண்டாகும் பலவித நோய்கள், தலைநோய், முதுகுநோய், இடுப்புவலி, ஜலதோஷம், டிஸ்சனி, பல் வியாதிகள், காதுவலி இன்னும் இதர வியாதிகளையும் அதிசீக்கிரத்தில் குணப்படுத்தும்.

புட்டி ஒன்றுக்கு விலை ரூ 2—0—0.
தபால் சார்ஜ் பிரத்யேகம்.

குறிப்பு:-ஏஜண்டுகள் தேவை. வியாபாரிகளுக்கு நல்ல கமிஷன் கொடுக்கப்படும்.

விலாசம்:—
ஜீவரத்னம் கம்பெனி,
நெ 6. சேலம்; (தென் இந்தியா)

## தேசானுகூலன்.

இஃதொரு சிறந்த தமிழ்ப்பத்திரிகை வாரம் இருமுறை பினங்கினின்று தேசிய ராஜீயவிஷயங்களுடன் வெளிவருவது. இதன் அருமை பெருமை அவசியம் முதலியவற்றை வாங்கிப் படித்தறிந்து கொள்ள வேண்டுமன்றி எழுத வியலாது.

ஆசிரியர்
வேலை, K. அருணசல தேவர்.

சந்தா விபரம்.

| | | |
|---|---|---|
| உள்ளூர் | வெளியூர்கட்கு வருஷம் 1- $ | 10—00 |
| அல்லது | ரூபாய் | 15—0—0 |
| 6-மீக்கு | திங்கி $ | 5—50 |
| அல்லது | ரூபாய் | 8—0—0 |

மானேஜர்,
தேசானுகூலன்
பினாங்ஸ்ரீட்
பினங்கு.

## தத்துவ இஸ்லாம்

இஃதொரு சித்திரப் படமுள்ள நூதனமான முதல்தர மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

இச்செந்தமிழ்ப் பத்திரிகையில் இஸ்லாத்தின் தத்துவங்களெல்லாம் உள்ளது உள்ளபடியே வெளிய நடையில் வெளியாக்கப்பட்டு வருகின்றன. இஸ்லாமார்க்க சம்பந்தமான பெரியோர்களின் உண்மைச் சரிதைகளும் எங்கள் நபிகள் நாயகத் மஹாத்மியமும் மிக்கத் தெளிவாகவும் தொடர்ச்சியாகவும் வெளி வரும்.

இஸ்லாமார்க்கத்தின் தத்துவத்தையும் அதன் பெருமையும் முஸ்லிம் ராஜ்யங்களின் முற்கால தற்கால நிலைமையையும் அறிய விரும்பும் ஒவ்வொருவருக்கும் இப்பத்திரிகை அத்தியாவசியமானது.

வருஷ சந்தா தபாற் கூலியுள்பட ரூ 3-0-0 அயல் நாடுகளுக்குரு 4-0-0

மானேஜர், தத்துவ இஸ்லாம் ஆபீஸ்,
நாச்சியார் கோவில்.

வெளிவந்து விட்டது! வெளிவந்து விட்டது!!

## மனோ சுந்தரம்

அருமையான தமிழ் நாவல்!

மாவீடுபண்ணை, ஸ்ரீமான் ஏ இராஜநாயகம் நாடார் எழுதியது. மெய்க்காதலை விளக்குவது. மாதர்களுக்கும் மற்றவர்களுக்கும் உயர்ந்த நீதியைப் போதிப்பது, சொற்சுவை பொருள்சுவை ததும்பிநிற்பது: பத்திராதிபர்களாலும், சிறந்த தமிழ் வித்துவான்களாலும் நன்கு மதிக்கப்பட்டது. உயர்ந்த கடிதத்தில் சுத்தமான பதிப்பு 200 பக்கத்துக்கு மேற்பட்டது: விலை ரூ 1

விலாசம்:—
ஏ. ராஜநாயகம் நாடார்,
நாடார் சங்கக் காரியதரிசி,
மாவீடுபண்ணை, தென்திருப்பேரை P. O.

## இனாம்! இனாம்!!

செல்வ ரஸக்கீர்த்தனை இனாம்! 5-வது கான்பரன்ஸ் ரிபோர்ட் இனாம்!

நாடார்குல மித்திரன் மாதம் மும்முறைப் பதிப்பு.

நமது மித்திரனுக்கு புதிய இரண்டு சந்தாதார்களைச் சேர்த்துக்கொடுத்து முன்பணமாக அனுப்பச் செய்கிறவர்களுக்கு, மாநாடு தண்டுப்பத்து ஸ்ரீமான் சொ. செல்லத்துரை என்ற ஆறுமுகப் பெருமாள் நாடாரவர்கள் இயற்றிய செல்வரசக்கீர்த்தனை இனாமாக அனுப்பப்படும். இதில் பலவர்ணமெட்டுகளிலான கீர்த்தனைகளும், மற்றபாட்டுகளும் அடங்கிருக்கிறது. 3 அணாவிலைமதிப்புள்ளது. பழைய சந்தாதார்கள் தங்கள் 4-வது வருடத்துசந்தாத்தொகைரூ. 3-8-0யை டிசம்பர்மீ 30உ க்குள் அனுப்புவார்களானால் நாடார்குலத்தவர்களின் முக்கிய வாசஸ்தலங்களில் ஒன்றாகிய விருதுபட்டியில் கூடிய 5-வது கான்பரன்ஸ் ரிபோர்ட்டு இனாமாக அனுப்பப்படும். இது உயர்ந்த டிம்மியில் பதிப்பிக்கப்பட்டது. விலை 6 அணா மதிப்புள்ளது. இதில் 5-வது கான்பரன்ஸுக்கு விஜயஞ்செய்த ஒவ்வொருவருடைய பெயர்முதலிய முழு நடபடிக்கைகளின் விபரமும், செலவு கணக்கும், மற்றவர்களுடைய அரிய உபந்யாசங்களும் அடங்கியிருக்கிறது.

நாடார்குல மித்திரன் ஆபீஸ். அருப்புக்கோட்டை.

## அமரர் புராணம்.

ஒப்புயர் குலாபிமானியாய் சர்க்காரில் உயர்ந்த உத்தியோகம் வகித்துக் காலஞ் சென்ற மேதாவி G. S. கொர்நேலியூஸ் நாடார் அவர்கள் இயற்றிய அரிய நூல். சான்ரோர் குலப் பெருமையை வெகு தெளிவாக எடுத்து விளக்கிக் காட்டுவது. இதன் அருமை பெருமைகளைப் பாராட்டாதவர் எவரும் இல்லை. 500 பக்கம் கொண்ட பெரிய புஸ்தகம் சில பிரதிகளே கையிருப்பு. விலை ரூ 2—8—0 தபால் செலவு பிரத்தியேகம்.

விலாசம்.—
ஸ்ரீமதி பூரணம் கொர்நேலியூஸ் அம்மாள்,
நாசரேத்து P. O. திருநெல்வேலி ஜில்லா.

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

## தன் சரீரமே தனக்கு உதவி.

(ஆசிரம போதினியின் நிருபர் பின் வருமாறு எழுதுகிறார்.)

தான் என்ற பரம்பொருளுக்கு தன் சரீர உதவியே அதிக விசேஷமானது. சரீரம் எம்மட்டில் சௌகரியமாயிருக்கிறதோ அம்மட்டில் மனது சுத்தமாகவேயிருக்கும். மனது எம்மட்டில் சுத்தமாகயிருக்கிறதோ அம்மட்டில் அறிவின் பிரகாசம் அதிகமாகவே யிருக்கும். அறிவின் பிரகாசம் அதிகமாகவே, ஞானக்கிரணங்கள் தோன்றி உண்மை உதயமாகும். இதையே மனக்கண்ணென்றும் நெத்திக்கண் என்றும் அகக்கண் என்றும் மகான்கள் சொல்லுவார்கள். நாம் புறம்பாக பார்க்கிற இரண்டு கண்கள் தவிர மூன்றாவது கண் ஒன்று நமக்கு இயற்கையாகவே இருக்கிறது. அதை யாவரும் அப்பியாசத்தால் அறியலாம். அப்பியாசம் என்றால் தேக அப்பியாசம் அல்ல. அறிவின் தேர்ச்சியாகிய அப்பியாச முறையினால் அது வெளியாகும். அதுவே அகப்புதையலாகும். அப்புதையல் இச்சரீரமாகிய பூமியில் புதையப்பட்டு மறைந்து கிடக்கிறது. மறைபட்டிருக்கிற இடம் நெத்தியில் திலர்தம் வைக்கிற ஸ்தானமே. அந்த ஸ்தானத்திற்குத்தான் சிவமதஸ்தர்கள் விபூதிபூசி பொட்டு வைக்கிறார்கள். வைணவர் திருமண்ணிடுகிறார்கள். மாத்துவர்கள் கோபி இடுகிறார்கள். மகம்மதியர்கள் கிறிஸ்தவர்கள் சலாம் வைக்கிறார்கள். அந்த இடம் மற்ற எல்லா இடங்களிலும் மேன்மை பெற்றது. அதையே அந்தரங்கமேல்நாடு என்று மகான்கள் கூறுகிறார்கள். அம்மேல் நாட்டில் இச்சரீரத்தை ஆளப்பட்ட அரசனும் அவர் மனைவி அம்பிகையுமுண்டு. அவர்கள் அந்த இடத்தில் சதா நடனமாடிக்கொண்டே ஆனந்த பரவசமாகவே யிருக்கிறார்கள். அப்படி அவர்கள் நடனம் புரிகிற இடமே அம்பல மெனப்படும். அம்பலத்தில் ஆடுகிற ஆட்டமே ஆனந்த தாண்டவ மெனப்படும். அப்படி அவர்கள் ஆனந்ததாண்டவம் ஆட யாது காரணம் என்றால் அந்த இடத்தில் அவர்கள் வெட்டாரவெளியில் எப்படி யிருந்து ஆடுகிறார்கள் என்றால் ஆகாய ரூபமாயிருந்து ஆடுகிறார்கள், இதையடிப்படியாய் அறிவாலறிந்துணர்ந்த அநுபோக ஞானிகள் அறிவார்கள். மற்றவர்களுக்கு என்னமோ போல் தோன்றும், என்னமோ என்றால் என்ன அர்த்தம், சற்று தோன்றியும் சற்று தோன்றாமலும் தெரிந்தும் தெரியாமலும் புரிந்தும் புரியாமலும் அறிந்தும் அறியாமலும் இருக்கிற இடத்திற்கு 'என்னமோ' என்று பெயர். இதன் ரகசியத்தை ஆராய்ச்சி செய்து அறிந்தவர்களுக்கே என்னமோ என்ற மோன நிலைமையும் தோன்றும். ஆகையால் தெரிந்ததைக் கொண்டு ஆராய்ச்சி செய்யவேண்டுமே யல்லாது தெரியாததைத் தொண்டு விட்டுவிடக்கூடாது. விசாரணையின்றி நியாயம் விளங்காது. சாக்ஷியமின்றி சங்கதி தெரியாது. ஆகையால் ஒவ்வொருவரும் தன்னைத்தானே விசாரணை செய்து தன்னிடத்திலிருக்கிற உண்மை பொருளை அறியவேணும். இதையே "கூட்டோடே கைலாசம்" என்கிறார்கள். கூடு என்றால் சரீரம், கைலாசம் என்றால் மோக்ஷஸ்தானம். இப்படி கூட்டுடன் கைலாசம் அடைகிறவர்கள் அநேகர் இருக்கிறார்கள். அவர்களையே ஞானிகள் என்று வேதங்கள் கூறுகிறது. அவர்கள் நம்மைப் போல் சர்வ சாதாரண மனிதராகவே தோன்றப் படுவார்கள். அப்படி அவர்கள் மனித சொரூபமாக தோன்றப் பட்டவர்களா யிருப்பினும் அவர்கள் அறிவின்மயமாகவே யிருப்பார்கள். ஸ்ரீராமர், கிருஷ்ணன் முதலானவர்கள் மனித உருவமாகவே அவதாரமெடுத்து தோன்றியதால் அவர்கள் சாதாரண மனிதராகப் பாவிக்காமல் விசேஷ மனிதராககொண்டாடப்படுகிறார்கள். அவர்களைப்போலும் அவர்களைவிட அதிகமாகவும் ஞானிகள் தங்களுக்கு தாங்களே பூஜிக்கத் தக்கவர்களாயும், கொண்டாடக் கூடியவர்களாயும் இருக்கிறார்கள். கடவுளாக நாம் நினைக்கிற ஸ்ரீராமர், கிருஷ்ணன் முதலானவர்களும் சரியை கிரியை யோகம் ஞானம் இவைகளை அனுஷ்டித்து பூஜை முதலானது செய்து கொண்டு வந்திருக்கிறார்கள். அவர்களே கடவுளாகயிருக்கும் போது அவர்கள் எந்த கடவுளை பார்க்க பூஜை செய்தார்களென்றால் கடமாகியஇந்த சரீரத்தில் உள்ளாகயிருக்கிற கடம்=உள் கடவுளை அறிவதற்காகவே பூஜை முதலானது செய்து வந்திருப்பதாக தெரிகிறது. ஆகையால் இச்சரீரத்தை சாமான்யமாக நினையாமல் ரொம்ப அருமையாய் வைத்துக் காப்பாற்றி அதிலிருக்கிற ஆதிமூலப்பொருளை அறிந்து இகபரம் இரண்டிலும் ஒத்து வாழ வேண்டும். இச்சரீரத்தின் அங்கங்களே ஆலயங்களில் அமைக்கப்பட்டிருக்கிறது. இச்சரீரம் இகபர சாதனங்களுக்கு இன்றியமையாதவசியம் பொருந்தியது. இதற்கு இச்சரீரம் சகல சௌகரியங்களுடன் சுகமாகயிருந்தால் தன் சரீரம் தனக்கு உதவியாகிற விஷயம் எல்லோருக்கும் நன்றாய்த் தெரிந்த விஷயமே.

## தியாகராஜன் அல்லது திறமையுள்ள ஓர் வாலிபன்

(முன் தொடர்பு)

மூன்றாம் பாகம்.

"மந்திரிக்கழகு வரும்பொருளுரைத்தல்" என்றவாறு தியாகராஜன் எவ்வளவோ நீதிகளை எடுத்துப்புகட்டி தர்மாபுரிக்குத் திரும்பிச் சென்றால் நலமுண்டாகு மென்று மன்றாடினபோதிலும் "கேடு வரும் பின்னே மதி கெட்டுவரும் முன்னே" என்ற ஆன்றோர் வாக்கிற்கிணங்க தியாகராஜனுடைய நீதிகளெல்லாம் செவிடன் காதிலூதிய சங்கோசையின் பலனையடைந்தன. நட்பின் தன்மையாலும் ராஜ குமாரன் என்ற பாந்தத்தாலும் கட்டுண்ட தியாகராஜன், வேறு வழியொன்று மில்லாமல் இளவரசனைப் பின்தொடரவாயிற்று.

இருவரும் தங்களுக்குள் ஏற்பட்ட அபிப்பிராய பேதங்களை நினைந்தவண்ணமாக ஒருவரோடொருவர் சம்பாஷிக்காமல் சவாரி செய்துகொண்டு போகும்போது ஓர் பூனை அவர்கள்முன் ஓடிற்று. இதைக் கண்டவுடன் இராம பாணத்தைக் கண்ட இராவணன் மனதுபோலும், ஓநாயைக் கண்ட ஆட்டுக்குட்டியின் மனம் போலும், கெருடனைக் கண்ட சர்ப்பத்தின் மனம்போலும், பாம்பைக் கண்ட தேரையின் மனம்போலும், வெந்தணலைக்கண்ட மெழுகின் குணம் போலும், தியாகராஜனுடைய மனம் பதைபதைத்தது. தான் கண்ணாரக்கண்ட அபசகுனத்தை தன் நண்பனும் பார்த்திருக்கக் கூடும் என்ற எண்ணத்தாலோ அல்லது புயற்காற்று வீசிக்கொண்டிருக்கும் ஓர் சமுத்திரத்தில் அகப்பட்ட பாய்க்கப்பலின் கதியை யடைந்த தன் மனதின் நேர்மையாலே தியாகராஜன் வாய்திறக்கமாட்டாமல் மன வருத்தத்துடன் இருக்கையில் திடீரென அவனெதிரில் மூன்று கெருடன் தோன்றவே அவனுடைய மனம் முன்னிலும் சஞ்சலமுற்றது.

"முடிவும் இடையூறும் முற்றியாங்கெய்தும், படுபயனும் பார்த்துச்செயல்" என்ற தெய்வப் புலவரின் வாக்கிற்கிணங்க நாம் காட்டினுள் சென்று வேட்டையாடுவதால் அடையக்கூடிய பயன் அதிக மில்லையே, அரசே! அக்காரியத்திற்கு இடையூறுகள் அநேகம் வரும் போலிருக்கிறது. ஆகையால், "அளவளாவில்லாதான் வாழ்க்கை குளவளாக் கோடின்றி நீர்நிறைந்தற்று" என்று வள்ளுவர் சொல்லிய பிரகாரம் என்னுடைய வார்த்தைகளை அங்கீகரிக்க வேண்டுகிறேன்' என்று சொன்ன சொற்கள் கார்த்திகேயனுடைய செவியில் பட்டதோ இல்லையோ என்பது பரம்பொருளுக்கே ஐக்கியம்.

இன்னும் கொஞ்சதூரம் காட்டினுள் சென்றவுடன் ஓர் ஏரிதென்பட்டது. அதன் மத்தியில் ஒரு தீவு போன்ற நிலபாகம் ஒன்றுண்டு. அந்தத்தீவிற்கு செல்லவேண்டும் என்று கார்த்திகேயன் பகர்ந்ததும் நண்பரிருவரும் கரை யருகில் நின்ற மரத்தில் தங்கள் குதிரைகளைக் கட்டிவிட்டு அருகிலிருந்த படகிலேறிக்கொண்டு தீவை நோக்கிச் சென்றார்கள், அத்தீவில் ஓர் வீடு இருப்பதைக் கண்டு சந்தோஷத்துடன் செல்லும்போது அத்தீவின் நான்கு மூலைகளிலும் உள்ள நான்கு மரங்களில், பார்ப்பவர் மனதைப் பிரமிக்கச் செய்யும் பிரேதங்கள் தொங்கவிடப்பட்டிருப்பதைக் கண்டு கொஞ்ச நேரம் தயங்கினார்கள். பின்னும் அவ்வீட்டிற்கு கதவில்லாததையும், நாய், நரி, பூனை, ஆந்தைமுதலியஜந்துக்களின் அபயக்குரல்கேட்க்கவே இருவரும் திடுக்கிட்டு திகைப்புடன் சிறிது நேரம், சித்தப்பிரமை கொண்டவர்கள் போல ஒன்றுமறியாமல் மயங்கினார்கள் சமயோசித புத்தியுமசந்தர்ப்பத்துக்கேற்றதந்திரமுமபடைத்து ஆபத்துகாலத்திலும் அமைதியைக் கைவிடாத நமது தியாகராஜனும் முதலில் சிறிது மனக்கலக்க முற்றானாயினும், மறுபடியும் தன்னைத்தானே தேற்றிக்கொண்டு, தயங்கித் தத்தளித்துக் கொண்டு, கல்தூண்போல் நிற்கும் கார்த்திகேயனைப் பார்த்து "அரசே! அவை நமக்கு மாயினும் இவ்விடத்தில் தாமதிக்காமல் உடனே புறப்படுவது தான் உத்தம" மென்று சொல்லிக்கொண்டே, தான் நின்றவிடத்தைவிட்டு சிறிது விலகினான். கார்த்திகேயனும் பேயறைந்தவனாய் தான் இன்னது தான செய்கிறோமென்று அறியாமல், மெதுவாக ஒவ்வொரு அடியாய் நகன்று அவன் பின் தொடர்ந்து வரவே, இருவரும குதிரை கட்டியிருக்கு மிடத்திற்கு வந்து சேர்ந்தார்கள்.

இருவரும்ஒருவருக்கொருவர்பேசிக்கொள்ளாமலே விரைவாகத்தமது குதிரைகளில் ஏறிக்கொண்டு ஊருக்குத் திரும்பிப் போகையில் வழிதப்பி வேறு பாதையில் சென்றுவிட்டார்கள். இவர்கள் பின் பற்றிச் சென்ற பாதை வரவர குறுகிக் கொண்டேபோனது. கொஞ்ச நேரத்தில் மரஞ் செடிகளால் மறைக்கப் பட்டுவிட்டது. விடாமுயற்சியுடன் செடிகொடிகளை விலக்கிக் கொண்டுபோக ஓர் அரண்மனை எதிரில் தென்பட்டது. அதைச் சுற்றி பலமான கோட்டையும் அதன் பக்கத்தில் தண்ணீர் தேக்கப்பட்ட அகழும் இருந்தன. நல்ல வேளையாக அகழைத்தாண்டிச் செல்வதற்கு பலகைகள் போடப்பட்டிருந்தன.

இன்னும்வரும்.

கஸ்தூரிமாணவன்.

## நமது மாகாணத்தின் தொழில் நிலை

### சில உண்மைகள்

நமது மாகாண ஜனங்களில் நூற்றுக்குச் சுமார் 14 பேர்தான் தொழிலை நம்பி ஜீவனம் செய்கிறார்கள்.

* * *

நமது மாகாணத்தில் நெசவுத் தொழிலில் மாத்திரம் 14 லட்சத்து 6:86 பேர் ஜீவனம் செய்கிறார்கள்.

* * *

1921ம் வருஷம் ஜன சங்கியைக் கணக்குப்படி அப்போது நமது மாகாணத்தில் 2105 தொழிற் ஸ்தாபனங்கள் இருந்தன வென்றும் அதில் 13லட்சத்து 6270 புருஷர்களும் 41 ஆயிரத்து 269-ஸ்திரீகளும ஜீவனம் செய்து வந்தார்களென்றும் தெரிகிறது.

* * *

இவர்களில் 1389 பேர் ஐரோப்பியர்களும் ஆங்கிலோஇந்தியர்களு மாவார்கள் இந்தியத் தொழிலாளர்களில் 14 வயதுக் குட்பட்ட சிறுவர்கள் 6353, சிறுமிகள் 5362 கணக்குப்படி இவர்கள் மொத்தத் தொழிலாளர்களில் நூற்றுக்கு 10 பேர் வீதம இருக்கிறார்கள்.

* * *

சென்னைக் கவர்ன்மெண்டின் ஆர்வினல் தொழிற் சாலையில் கொஞ்சம் பொறுப்புள்ள உத்தியோகங்களில் கூட இந்தியர்கள் நியமிக்கப்பட வில்லை.

* * *

காபி, தேயிலை பயிர் செய்வது பத்து வருஷத்துக்குள் மூன்று மடங்கு அதிகமாயிருக்கிறது. நமது மாகாணத்தில் 91 சுரங்கங்கள் இருக்கின்றன. இவைகளில் 6665 ஸ்திரீ புருஷர்கள் வேலை செய்கிறார்கள். இவர்களில் 14 வயதுக் குட்பட்ட சிறுவர்கள் 352 பேர், சிறுமிகள்236பேர். சுரங்கங்களில்மாங்கனீஸும் மைகாவும் தான் அதிகமாக வெட்டி யெடுக்கப் படுகிறது.

* * *

நமது மாகாணத்தில் நெசவு ஸம்பந்தமான தொழில் ஸ்தாபனங்கள் மாத்திரம் மொத்தம 441, இவைகளில் 33871, புருஷர்களும் 13750 ஸ்திரீகளும் வேலை செய்கின்றார்கள். அவர்களில 14 வயதுக் குட்பட்ட சிறுவர்கள் 2115 பேர், சிறுமிகள் 1894, பருத்திக் கொட்டை யெடுத்தல் பருத்தி சுத்தம்செய்தல் பருத்தியைப் பேலாகக் கட்டுதல் போன்ற வேலைகளைச் செய்யும் மில்கள் ஆக மொத்தம 228 இருக்கின்றன. இவைகளில் 6707 புருஷர்களும 5075 ஸ்திரீகளும பிழைக்கிறார்கள். ஒரு பிரஞ்சுக்காரன், இரண்டு கிரேக்கர்கள், ஐந்து ஸ்விட்ஸர்லாந்துகாரர்கள் நான்கு ஜப்பானியர்கள் வேலை செய்து பிழைக்கின்றார்கள். இந்த 228 மில்களில் 14-வயதுக் குட்பட்டவர்கள் தொகை மொத்தம் 177 பேர்.

* * *

நூல் நூற்கும் மில்களும், துணிநெய்யும் மில்களும் 115 இருக்கின்றன இவைகளில் 23439 புருஷர்களும் 6167 ஸ்திரீகளும் வேலைசெய்கின்றார்கள். பெரிய உத்தியோகங்களில் ஒரு அமெரிக்கன், இரண்டு பிரஞ்சுக்காரர்கள், இரண்டு டேச்சுக்காரர்களிருக்கிறார்கள். இந்த 115 மில்களிலும், 14 வயதுக் குட்பட்ட தொழிலாளர்கள் 3377-பேர்.

* * *

நமது மாகாணத்தில் மாத்திரம் 169-403 கைத்தறிகள் வேலைசெய்துவருகின்றன. குண்டூர் ஜில்லாவில் மாத்திரம் 14974-தறிகள் வேலை செய்கின்றன. விசைநாடாத் தறிகள் தமிழ் ஜில்லாக்களில்தான் அதிகம். முக்கியமாக தஞ்சாவூர், சேலம் ஜில்லாக்களில் விசைநாடாத் தறிகள் அதிகமாக உபயோகத்திலிருக்கின்றன.

* * *

53-முனிஸிபல் ஒர்க்ஷாப்புகளில் 21-525 பேர் வேலை செய்கின்றார்கள். தோல் பதனிடும் தொழிற்சாலைகள் 84 இருக்கின்றன. எலும்பரைக்கும் ஆலையும் ஒத்து வேலை செய்கிறது. இவைகளில் 4674-பேர் ஜீவனம் செய்கின்றார்கள்.

* * *

சர்க்கரை செய்யும் தொழிற்சாலைகள் நவீன முறையில் அமைக்கப்பட்டு 7-இருக்கின்றன. முக்கியமாக விருப்பது நெல்லிக்குப்பத்தி லென்பது யாவருக்கும் தெரிந்த விஷயம். மேலே கூறப்பட்டுள்ள எல்லாத்தொழிற் சாலைகளிலும் உயர்ந்த உத்தியோகங்களோ அல்லது அவைகளுக்குத் தலைமை ஸ்தானங்களோ வகிப்பவர்கள் அந்நியர்களாகவே யிருக்கிறார்கள். இந்தியர்கள் அவைகளில் கூலிகளாகவும், குமஸ்தாக்களாகவும், உயர்ந்தால் மேஸ்திரிகளாகவும் தான் நியமிக்கப் பட்டிருக்கிறார்கள். இந்தியர்கள் கேவலம் நெற்றி வியர்வை நிலத்தில் விழப் பாடுபட்டுத் தொழில்களின் லாபத்தில் சிறிதும்பெற அனுகூலமில்லாம லிருக்கிறார்கள். லாபமெல்லாம் முதலாளிகளுக்கே போய் விடுகிறது.

* * *

நமது மாகாணத்தில் தொழில் ஸ்தாபனங்கள் அதிகமாக விருந்தால் இந்தியர்கள் மேன்மேலும் அவைகளில் செல்வாக்கு பெறவும், பெரிய பதவிகள் வகிக்கவும் நல்ல சம்பளம் பெறவும் கூடும். நமது மாகாணம் அப்பெரிய நிலையை அடைய வேண்டுமானால் கவர்ன்மெண்டாரின் ஆதரவும், இந்திய தனவான்களின் முயற்சியும் வேண்டப் படுகின்றன.

(டாக்டர். ஸ. போ)

## Census Report.

### ஜன சங்கை

1911௵ சென்ஸஸ் பிரகாரம் சென்னை இராஜதானி ஜன சங்கை 41,670,160 ஆனால் 1921௵ த்திய மார்ச்சு௴ 18-தேதியன்று எடுத்த சென்ஸஸ் பிரகாரம் சென்னை மாகாண ஜனத் தொகை 42794155 இருக்கிறது. சென்ற சென்ஸைக்காட்டிலும் 1921௵த்திய சென்ஸஸ் பிரகாரம் சென்னை மாகாணத்தில் 923995 ஜனத்தொகை அதிகமாயிருக்கிறது.

சென்னை மாகாணம் முழுவதிலும் 8416255 வீடுகள் இருக்கின்றன. மாகாணம் முழுவதிலும் மொத்தம் 21100158 ஆண்கள். ஆயிரத்திற்கு ஆண்களில் கலியாணமாகாதவர்கள் 531. ஆனால் கலியாணமானவர் 435 இதில் பெண்டிழந்தவர்கள் 44, நம் மாகாணம் முழுவதிலும் 21693997 பெண்கள். அதில் கலியாணமாகாதவர்கள் 373 ஆனால் கலியாணமானவர்கள் 438, இதில் விதவைகள் 189 என்று தெரியவருகிறது.

சென்னை இராஜதானி முழுவதிலும் மொத்த ஜனங்களில்,

கலியாண மானவர்கள் 18,305,770
கலியாண மாகாதவர்கள் 18,465,667.
விதவைகளும், பெண்டிழந்தவர்களும் 5022718. படிக்கத் தெரிந்தவர்கள்— 3667737. இந்துக்கள் 37,942,191. மகமதியர்கள் 2865285. கிறிஸ்தவர்கள் 1380672.

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

# குல வர்த்தமானம்.

### சட்டசபைக் குறியவர் யார்!

தற்சமயம் சென்னையில் நடந்துவரும் சட்டசபை மெம்பர்களின் ஸ்தானம் இன்னும் ஒரு வருஷத்துக்குள் காலாகதியாகிறதாய் தெரியவருகிறது. புதுஎலெக்ஷன் மறுபடியும் நடைபெறும்போது அபேக்ஷகராய் நிற்கும் நந்தலகனவான்கள் ஜன சமூகத்திற்குழைத்து வருபவரும் உண்மையான குலாபிமானியாயுமிருக்க வேண்டும். அபேக்ஷகராய் நிற்கும் கனவான்களை (சட்டசபைக் குறியவர் யார்) என்றறிந்து, ஜன சமூகத்திற்குழைத்துவரும் புண்ணிய புருஷர்களாகிய குலாபிமானிகளைக் கவனித்து அன்னவர்களுக்கேவோட்கொடுக்கவேண்டும். முன்நடந்த எலெக்ஷனுக்குஓட்டர் லீஸ்டைப் பார்த்ததில், அநேகமாய் கிராமமுனிசிபுகளால்எழுதவிட்டும், முந்நவர்கள் வேர் பட்டாவை மாற்றாதபடியாலும் ஓட்டர் லீஸ்டில், நம்மவர்கள் பெயர் குறைவாகிவிட்டது. இப்பேற்கொற்ற விஷயங்களை எல்லாம் இது சமயமே கவனித்து தம் தம் பேருக்கு ஒவ்வொருவரும் பட்டாக்களை மாற்றிவைத்துக் கொண்டால், ஓட்டர் லிஸ்டில் நம்மவர்களுக்கு மெம்பர்ஸ்தானம் இலகுவாய்க் கிடைக்கும். ஆகையால், பட்டா மாத்தக்கூடிய புண்ணியவான்கள் பட்டா மாற்றிக் கொண்டு நம்ஜன சமூகத்திற் குழைத்து வரும் புண்ணிய பூமான்களுக்கு ஓட்டு போடவேசாடியதாய்க் கோறுகிறேன்.

உண்மையுரைப்போன்.

∴

### கோவில்பட்டியிலுள்ள நாடார்களுக்கு ஒரு விண்ணப்பம்

இவ்வூரில், மதுரை பாண்டிய குலதீபம் பத்திராதிபர் ஸ்ரீமான் K. S. அருணகிரிநாடார் அவர்கள் யேற்படுத்திக் கொடுத்த க்ஷத்திரியகுல நாடார் பரிபாலன சங்கம் வெகு விமரிசையாய் நடைபெற்று வந்தது யாவரும் கண்டறிந்த விஷயமே. அப்படியிருக்கும் தருணத்தில் ஒரு அற்பக்காரியத்தை முன்னிட்டு, ஆறுமாத காலமாய் மகமை நடை பெறாமலும் ஆலயத்திற்கு தீபம் போட எண்ணை கொடுக்காமலும், மகமை கட்டடத்தில் பாது காப்பில்லாமல் சீர்கேடாயும் மேற்சங்கம் ஒரு மூலையில் தூங்குகிறதையும் நங்குல முக்கியஸ்தர்கள் கவனிப்பார்களா? என்று ஸ்ரீமான் C. பாலகிருஷ்ண நாடார் எழுதுகிறார்.

∴

### சாத்தான்குளம்.

சாத்தான் குளத்தில் சுமார் 400) வீடுகளில் 100) வீடுகள் நாடார்களுடையதாயிருக்கலாம் ஆனால் குல முன்னேறும் கல்விகருவி என்ற பெரிய கல்விச்சாலை ஒன்றில்லாததைப் பற்றினதுவிருசபம் அனுதினமயர்ந்து அழுத்தத்துடன் வரையலானேன். அபர்ந்த போர்டிங் ஸ்கூல் ஆர், சி. எஸ். ஸ்கூல். சி. எம். எஸ். ஸ்கூல்களிருந்தும் நம் மாணுக்கர்கள் முன்னேற போதுமானதாயில்லை. சி. எம். எஸ். ஸ்கூலைஹைஸ்கூலாக்கி பீஸ் இல்லாமல்ச் செய்து கவர்ன்மெண்டு கொடுக்கிற கிராண்டு போக நாடார்கள் கையிலிருந்து வருஷம் சுமார் 500 ரூபாய் மாத்திரம் கொடுத்தால் போதுமென் றெண்ணுகிறேன். கிறிஸ்தவர்கள ரோமான் கத்தோலிக்ஸ் இந்துக்களுமான அநேக கனதனவான்கள் அபிமானம் நிறைந்து இச்செய்தி பல தினங்களுக்கு முன் தங்களின் உள்ளங்களில் உதயமாகி தூண்டுவாரில்லாமல் மறைந்திருக்கின்றன. கனவான்கள் தூண்டினால் காரியம் சித்தியாகும். இவ்வேளையில் ஹை. ஸி. எஸ். ஸ்கூலிலுள்ள சில வகுப்புகளையும் சில உபாத்தியாயர்களையும் எடுப்பதாக வதந்தி உலாவுகிறதே. 'நாடார்குல மித்திரன்' 1922ம் ஹூ அக்டோபர்மீ 21உ பதிப்பில் "நாடார் மகாஜனசங்கம், தேவை" என்றிருப்பதை கவனித்து மனுச் செய்யும் புண்ணியவான்களுண்டா? நமது மாட்சிமைதங்கிய தாய் சங்கமும் இப்பரிதாபத்தைக் கவனிக்குமா?

வருடம் 10 ரூபாய்கள் கொடுக்க சக்தியுள்ள 500 கனவான்களிருக்க 50 கனவான்களாவது முன்வற லாகாதா! ஆ! கற்றறிந்த பெரியோரே! வரும் வருமென்றால் வருவதில்லை. இப்பொழுதே ஒருமையுடன் வழிபார்த்து ஏராளமான கையை நீட்டி கதியின் வழியை பிடித்து கூட்டிவந்தாலல்லாமல் நாம் நமது பின் சந்ததிகளை கவனித்தவர்களாக மாட்டோம். என்று ஸ்ரீமான் ப. ஆ. கந்தசாமி நாடார் எழுதுகிறார்.

∴

### இரங்கூன்.

சென்ற 25-8-22-ல்இரங்கூன 28 கல்லி 40-வது எண்ணுள்ள கட்டடத்தின்கண் ஸ்ரீமான் ஏ. ஜே தாமஸ் நாடார் அவர்கள் அக்கிராசனத்தின்கீழ் ஓர் பொதுக் கூட்டம் கூடிற்று. அதில் பிரபல வியாபாரம் செய்துவரும் வாலிபர்களும் பள்ளி மாணவர்களும் கூடி கல்வி அபிவிர்த்திக்கென்று பர்மா பால்ய நாடார் சங்கத்தின் கல்வி அபிவிர்த்தி சங்கமொன்று ஸ்தாபித்து சங்கத்திற்கு சபைத் தலைவராக ஸ்ரீமான் ஏ. ஜே. தாமஸ் நாடார் அவர்களை நியமித்து இவ்விரண்டு வருடமாய் வாரம் தோறும் சனிக்கிழமை யன்று மாலை ஆறுமணிக்கு மீட்டிங்கிகளும் யாதொரு குறையின்றி நடந்து வந்தது.

உலகத்திலுள்ளமரம் செடிகளுக்கும் மிருகசாதிகளுக்கும் தொத்துவியாதி வருவதைப் போல் இச்சங்கத்திற்கு சில சமயங்களில் சில இடையூர்கள் யேற்பட்டிருந்தபோதிலும் அவ்விடையூர்களை நீக்கி இச்சங்கமானது சூரியனைப்போல் பிரகாசித்துக் கொண்டிருந்தது. சூரியனைப்போல் பிரகாசித்துக் கொண்டிருந்த சங்கமானது இப்பொழுது ஒளிமங்கி இருள் அடைந்து போயிருக்கிறது. மேலும் இதன் தலைவர் ஸ்ரீமான் ஏ. ஜே. தாமஸ் நாடார் தனது சுயதேசம் சென்றுவிட்டார். இதுவரையிலும் நடந்த வரவு செலவு விபரம் ஆவரோகட்டதான் இருக்கிறது. ஆகையால் எவரோர்களாவது கூட்டம் கூடி சங்கத்தை சரிவர நடத்தி நன்மையடையுமாறு வேண்டுகிறேன்.

குலாபிமானி.

∴

### இதுதானு முன்னேற்றம்?

அருப்புக்கோட்டைக்குத் தென் கிழக்கில் சுமார் 12மைல் தூரத்தில் மணியகாறன்பட்டி யென்றவூர் வொன்று உண்டு அதில் நம்நாடார்கள் வீடு 20 வரை இருக்கிறது. சுமார் 20 வருஷங்களாக ஒற்றுமையுடன மகமை முதலானதும் ஒழுங்காக வசூலாகிவந்து கொண்டிருந்தது. ஆனால் தற்சமயம் யாதுகாரணத்தினுலோ, மகமை வசூல் செய்யப்படாமல் நின்று விட்டது. ஆகையால் ஊரிலுள்ள பெரிய மனிதர்கள் கவனிக்க வேண்டுகிறோம். என்று ஸ்ரீமான் எஸ் தொந்திநாடார்இரங்கூனிலிருந்து எழுதுகிறார்

### பரமன்குறிச்சி

ஷை ஊர் நாடார் உயர்தர எலிமெண்டரிபாடசாலையின் இரண்டாவது நிறைவுவிழா நாளது வருஷம் அக்டோபர் மாதம் 20-ம் தேதி வெகு விமரிசையாய் கொண்டாடப்பட்டது. அன்று மாலையில் பிள்ளைகள் கைகளில் கொடிகள் பிடித்தவர்களாய் பாண்டு வாத்தியங்களுடன், ஊர்வலம் வந்தார்கள். மாலை 4 மணிக்கு பிள்ளைகளுக்கு விளையாட்டுவைத்து ஜெயித்தவர்களுக் பரிசுகள் அளிக்கப்பட்டன.

இரவு 8-மணிக்கு பிள்ளைகள் இங்கிலீஷிலும் தமிழிலுமாக சிலகதைகளை படித்து நாடக ரூபமாக நடித்தார்கள். சுற்றுப் பட்டிகளிலுள்ள ஜனங்களுடன் உத்தேசம் 2500 ஜனங்கள் வேடிக்கை பார்க்க வந்திருந்தார்கள். மகா-ள-ள-ஸ்ரீ பூ. குமரகுருபர நாடாரவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள். அக்கிராசனாதிபதியவர்களுக்கும் சபை முக்கியஸ்தரில் சிலருக்கும் வந்திருந்த ஜனங்களை தன் இனிய குரலால் மகிழச் செய்தஓர்மாணவருக்கும் புஷ்ஆரங்கள்சூட்டப் பட்டன. பாடசாலையின் வரவுசெலவு கணக்கு வாசித்து ஒப்புக் கொள்ளப்பட்டது. சென்ற வருஷம் வரவு ரூ 1589-12-6. செலவு ரூ 1606-7-6 அதிகச் செலவு ரூ 16-11.

ஷை பாடசாலையை இன்னமும் திறமையாய் நடத்தும் நோக்கமாய் விழுவீடுதீத்தியப்பநாடாரவர்களும் குமரப்ப நாடார்களும் ஒன்று கூடி தங்களுக்குள் நெடுங்காலமாய் ஏற்பட்டிருந்த ஐக்கியக்குறைவை நிவிர்த்திசெய்யும் பொருட்டு சொத்துக்கள் விஷயமாயுள்ள தாவாக்களையெல்லாம் தாங்களே முடிவுசெய்து கொண்டதுமிகவும் மெச்சத்தக்கது. இவ்வொற்றுமை என்றுட் நிலைபெற்று பாடசாலை முன்னுக்குவர எம்பெருமான் அருள்புரிவாராக. என்று ஸ்ரீமான் தலைமைஆசிரியர் குமரப்ப நாடார் எழுதுகிறார்.

### 1918ஹூ ஜூன்மீ 5உ மதுரையில், நாடார் மஹாநாட்டின் தலைமை வகித்த ஸ்ரீமான் S. ஸ்ரீனிவாசய்யங்காரவர்கள் பேசிய முக்கிய சாராம்சம்.

மகத்து வழும்கிரு மூலாதாரமான உண்மையின்படி நீங்கள் ஒரேவித என்னங்களாலும் நாகரீகத்தாலும் செல்வாக்கடையப் பெற்ற அனுபவத்திலும் என்னோடு ஏக இயற்கையுடைய சகோதரரான இந்தியரா யிருப்பதால் ஜாதிக் கட்டுப்பாடுகளை நிராகரித்த பிராமணன் பிராமணரல்லாதவன் இந்து அல்லது கிறிஸ்தவன் என்னும் வித்தியாசங்களை மறக்கச் செய்கிற ஐக்கியமும் உதாரமுமான பொது நோக்கமொன்றும் என்னை நீங்கள் அழைத்த அழைப்பை மதிக்கிறேன்.

நான் வைக்கிலாகச் சேர்ந்தவுடன் கழுகுக் கோயில் வியாச்சியத்தில் ஆஜராக நேர்ந்தது. அந்தவிவகாரத்திலும் இந்து ஆலயங்களுள் பிரவேசிக்கும் விஷயமாயுள்ள உங்கள் உரிமை விஷயமாய் உங்கள் ஜாதிக்கும் இதர ஜாதிகளுக்கும்ஏற்பட்ட விபகாரங்களில் நான் தலையிட நேரிட்டதிலிருந்தும், நான் ஜனப் பழங்க ஆசாரசீர்திருத்த நடபடிக்கைகளில் பலமாய இறங்கி வேலை செய்ய ஆரம்பித்தது மாத்திரமல்ல. உங்களுடைய கஷ்டஉணர்ச்சிகளையும் காட்டத்தையும் கொஞ்சம் ஆராயவும் உங்கள் ஜாதிவிஷயமாய் அனுதாபங் கொள்ளவும் நேர்ந்தது.

யுத்தமானது இந்தியாவுக்கு அதிசமீபத்திலே நடந்துகொண்டிருக்கிறது. இந்தியாவின் மேல் ஜெர்மனியார் படையெடுத்து பலமாய் தடுக்க, இந்தியஜனங்களின் உதவி வேண்டுமென்று நமது இராஜ பிரதிநிதியவர்கள் கேட்டிருக்கிறார்கள். இந்தச் சமையத்தில் நீங்கள் அதுவிஷயமாய் அரசாங்கத்தாருக்கு உதவி செய்யவேண்டுமென்பதை நீங்களெல்லோரும் பிரஜைகளுக்குரிய அதிலே அஸ்திபாரம்மாக கண்டறிந்திருக்கிறீர்களென்று நான் பூரணமாய் நம்பியிருக்கிறேன்.

உங்களுடைய திரவியத்திற்கும் ஜனத்தொகைக்கும் தகுந்தாற்போல் இரண்டாம் யுத்தக்கடனுக்கு நீங்கள் வைராக்கியத்துடன் தகுதியான பணங்கொடுத்துதவ வேண்டும். இந்தியாவின் படை வீரருள் நீங்கள் யுத்தம் பண்ணும் ஜாதியாயிருந்த பழய சரித்திரங்களை பெருந்தன்மையாய் துலக்குவதாக நீங்கள் திடமும்புத்தஅபேட்சையுமுள்ள வாலிபரைப் போதுமான அளவு யுத்தகளத்துக்கு அனுப்பவேண்டும். புஜபல பராக்கிரமத்திலும் பொது நலங்களுக்கும் ஊக்கத்திலும் மிகவும் பேர்வாங்கியிருக்கிற நீங்கள் உங்கள் சொந்தக் குலத்தவராகச் சேர்ந்து நாடார் பட்டாளம் ஒன்று உண்டாக்கிக் கொடுப்பது கஷ்டமாயிருக்காது.

பிறர் சம்பூர்ணவிதம் மதிக்கிறார்களென்பதை நாம் எப்போதும் தெரிந்துகொள்ள வேண்டியது. எப்போதும் பிரயோசன முண்டென்னுவதும் சில வேளைகளில் அத்யாவசியமாகவு மிருக்கிறது. அப்படிச்செய்வதால் நீங்கள் எவ்விடத்தில் பலமாயிருக்கிறீர்கள், ... தில் துர்ப்பலமாயிருக்கிறீர்களென்றும், எந்தவழிகளில் இனி நாம் விருத்தியடைய வேண்டுமென்றும், அதற்காக என்னென்ன முறைகளை கையாடலாமென்றும் தெரிந்து கொள்வதற்கு, உங்களுக்கு தருநிட்டண்டாகும். உங்கள் ... சூட்சமாய்க் கவனித்து வந்திருக்கிற இந்தியரும் ஐரோப்பியரும், நீங்கள் புத்திக் கூர்மையும் சுதந்தரப் பிரியமும் ... வினமையும் சுருசுருப்பும் பொருமை பொருத்துழைத்தல் என்னும் குணங்களும் ஊக்கமும் முன்னேற்ற முயற்சியும் உடையவர்களென்று சாட்சி பகர்கிருக்கின்றார்கள். உங்களை சித்தியம் யார்கவனித்தாலும் இச்ச நற்சாட்சிக்கு ருஜிப்படுவதாகவே யிருக்கிறது. கல்வியிலும் கூட்டுறவிலும் நீங்கள் சீவிரமாய் தலைமை ஸ்தானங்களை அடைகிறவர்களாகவே யிருக்கிறீர்கள்.

இந்துஜாதியேற்பாடுபழையகாலத்திலிருந்த சீதிப்படி இப்போதிருக்கவில்லை. இந்துக்களின் ஆசாரமானது ஆச்சரியமான மாறுதலடைந்திருக்கிறது. எல்லாவற்றிற்கும் மேலாக மதவிஷயங்களில் குறுகிய புத்தியும் ஒதுங்கி தனியாக நிற்கும் சுபாவமும் மாமூலையே பெரிதாகக் கொண்டாடுவதும் வரவரக் குறைந்து, ஒரே மதத்தைச் சேர்ந்தவர்களென்ற சகோதர உணர்ச்சியும் இந்து மதத்தின் செல்வாக்கு விரிந்து ஆளவேண்டுமென்ற ஆசையும் நம் மதத்தின் விசாலமும் உயிருமான கொள்கைகளை பலமாய் ஸ்தாபிக்க வேண்டுமென்ற ஆவலும், அதிகமாயிடங் கொடுக்கப்பட்டு வருகின்றன. எல்லா ஜாதிகளுமே தங்களுடைய சமூக வாழ்வில் நம்முடைய மதத்தாலுண்டாகும் தூண்டுதலைபும் ஆறுதலையும் சமமாக அனுபவிக்கும் பாத்தியதை உண்டாக வேண்டு மென்றும் மதசம்பந்தமான கிரியைகளை நடத்துவதில் சகலரும் சமமாயிருக்க வேண்டுமென்றும் எல்லா யிடங்களிலும் ஆசை அதிகரித்து வருகின்றது. தங்களுடைய பழைய ஆலயங்களுக்கு வரப்படியாக உங்களுடைய அண்டை அயலார் உங்களை உற்சாகமாய் அழைக்கும் படியான காலம் வெகு சீக்கிரத்துள்ளிருக்கிறது.

சென்ற வருஷத்தில் உங்கள் கூட்டத்தின் தலைமை வகித்த கனம் ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்கள் தாம் கோவில்களில் ஆராதனை செய்வதை மதிப்பதில்லை யென்றும் நீங்களும் அப்படியே செய்யும் படியாகவும் சொன்னதாகத் தெரிகிறது. எனக்கு அர்த்தமான மட்டில் அவர் சொன்னதை ஒப்புக்கொள்ள முடியவில்லை. பலர் கூடி ஒரே யிடத்தில் கடவுளை வணங்க ஏற்பட்ட யிடங்களே கோவில்கள். பூர்வகாலம் தொட்டு வந்திருக்கும் கோவில்களோ பல மகான்களுடைய சம்பந்தத்தாலும் பல தலைமுறை ஜனங்களின் பக்திக்கு இலக்காக யிருப்பதாலும் புனிதமாகக் கொண்டாடப் படுகின்றன. இந்துக்களின் மதசம்பந்தமான வாழ்வில் கோவில்கள் வெகு முக்கியமான ஸ்தானம் பெற்றிருக்கின்றன. கிறிஸ்தவர்கள் தங்கள் சர்ச்சுகளிலும், மகம்மதியர் தங்கள் மசூதிகளிலும் தொழுவது போல் இந்துக்கள் தங்களுடைய கோவில்களில் தொழுகின்றனர். இந்துமதத்தின் சகல பெரிய கோவில்களும் ஜாதிபேதமின்றி எல்லா ஜாதியாரும் தொழுகைக் காகப் போய்வர தடையின்றி இடங் கொடுக்கப் படுவதாயிருந்தால் எனக்கு நிறம்ப சந்தோஷமுண்டு. கோவில்களுக்குள் எல்லா இந்துக்களும் புகுந்து ஆராதனை செய்யலாமென்று யிடங்கொடுத்துவிட்டால் இந்து மதத்துக்கு லாபமேயல்லாது நஷ்டமல்ல. எல்லா ஜாதியும் கடவுளுக்கு சமமல்லவா? அப்படியிருந்த கோவில்களுக்குட் பிரவேசிக்கக் கூடாதென்று சிலரை ஒதுக்கும் நடபடிக்கை எப்படித் தகும்! மனிதனே செய்துகொண்ட சட்டங்களும் வழக்கங்களுமே. மேற்கண்ட ஒழுங்கீனங்களுக்கு காரணமானவை

உங்கள் ஜாதியார் இந்துக்கள் அல்லது மகா மேலான ஜாதியாரைச் சேர்ந்தவர்களென்பது என்னுடைய அபிப்பிராயம். உங்கள் ஜாதி மேலானதென்றும் ஒரு விதத்திலும் தாழ்ந்ததல்லவென்றும் என்னுடைய நிட்சய அபிப்பிராயம்.

# கவனிப்பு.

நமது பழைய சந்தா நேயர்களுக்கு பழைய பத்திரிகையில் தான் வி பி. அனுப்பப்படும். ஆனால் நடப்புப் பத்திரிகையை வழக்கம்போல் அனுப்பி வைக்கப்படும்.

வி. பி. நோட்டீஸ் கிடைக்கப் பெற்ற ஒருவாரத்திற்குள் வி. பி. யை பெற்றுக் கொள்ளாவிட்டால் அது திரும்பிவிடு மாகையால் நேயர்கள் கவனித்து, வீண் சிரமத்திற்கும், செலவிற்கும் இடம் கொடுக்காமல், வி. பி. யை பெற்றுக் கொள்ளுவார்கள் என்றே நம்புகின்றோம்.

மானேஜர்.

## நாடார்குல மித்திரன்

துந்துபிஸு கார்த்திகைமீ 16உ

## தமிழ்மாகாண மகாநாடு.

கோயம்புத்தூர் ஜில்லா திருப்பூரில் நமது தமிழ் மாகாண மகாநாடு ஸ்ரீமான் வாசுதேவய்யா அவர்கள் தலைமையின் கீழ்க் கூடி வெகு சிறப்புடன் நடைபெற்றதாக அறிந்து சந்தோஷிக்கின்றோம்.

இரண்டாம் நாள் நடவடிக்கையில் நாடார்களும் தேவாலயங்களும் என்ற பிரேரணை கொண்டு வரப்பட்டு இரண்டு மணி நேரம் பலத்த விவாதங்களும், கூச்சலும், குழப்பங்களு முண்டானதாகவும் அறிகிறோம். இது சம்பந்தமாய் சபையில் என்னென்ன நிகழ்ந்தன வென்பது நமக்கு நுட்பமாய்த் தெரியவாதர்யினும் சுதேசப்பத்திரிகைகளில் வெளிவந்த விஷயங்களாலேயே நடந்த விர்த்தாந்தங்களை எப்படி யென்று அறிந்து கொள்ளக் கூடியதாயிருக்கிறது. அங்கு கொண்டு வரப்பட்ட தீர்மானமாவது:-

"தமிழ் நாட்டிலுள்ள நாடார் சமூகத்தினர் பாண்டிய நாட்டிலுள்ள தேவாலயங்களில் பிரவேசிக்க வொட்டாமல் ஏற்பட்டுள்ள கட்டுப் பாடுகளை அமைதியான முறையில் ஒழிக்கவும் "சாஸ்திரங்களில் கட்டுப்பாடு இருக்குமாயின் அவைகளை மாற்றவும் காங்கரஸ் ட்டங்களை ஆதரிப்போர் உடனே முயன்று வேண்டுவனச் செய்யுமாறு இம்மகாநாடு தீர்மானிக்கிறது" என்பதேயாம்.

இத்தீர்மானத்தை ஸ்ரீமான் திரு. வி. கலியாணசுந்தர முதலியாரவர்கள் கொண்டு வந்து பேசும்போது சாஸ்திரம் திருச்சிக் கொன்றும், காசிக்கு ஒன்றுமாகவா யிருக்குமென்று சொன்ன போது சபையில் கூச்சலும் குழப்பமு முண்டாகி சாஸ்திரத்தை மாற்றுவதற்கு யாருக்கும் அதிகார மில்லை யென்று சப்த முண்டாகி யிருக்கிறது. ஸ்ரீமான் இராமசாமி நாயக்கரவர்கள் தீர்மானத்தை உள்ளன்புடன் ஆதரித்து அந்தரங்க சுத்தியுடன் பேசி யிருப்பதாகவுந் தெரிகிறது. ஸ்ரீமான் வைத்தியநாதய்யர் முதலிய பிராமணர்கள் சாஸ்திரத்தை மாற்றுவதென்பதை எடுத்துவிட வேண்டு மென்று வாதித்ததாகவும் மீண்டும் கூச்சலும், குழப்பமும் உண்டானதாகவும் அறிகிறோம்.

ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடு அவர்கள் சமாதானமாய்ப் போகும்படி பொதுப்படப் பேசும்போது பிராமணர்கள் மீது குற்றம் வராமலிருப்பதற்குக் கொஞ்சம் தாங்கியிருக்கிறார். மறுபடியும் ஸ்ரீமான் கலியாணசுந்தர முதலியாரவர்கள், சட்டசபையை பகிஷ்கரிக்க ஒப்புக்கொள்கிறீர்கள், ஆனால் நமது சுயராஜ்யத்தில் செய்யக் கூடிய காரியத்தை மறுக்கிறீர்கள். நீங்கள் இந்த தீர்மானத்தை நிராகரித்து விட்டால் அராபியர்களைப்போல் சாத்வீக எதிர்ப்பை அனுஷ்டிப் போம் என்று வற்புறுத்திப் பேசியபின் அக்கிராசனாதிபதி யவர்களும் இந்த சபையை நடத்த நமக்கு யோக்கியதையில்லாவிடில் சுயராஜ்யத்திற்கு நாம் அருகதையுடையவர்களாக மாட்டோம் என்று சொல்லியிருக்கிறார். பின்னர் ஸ்ரீமான் மகாலிங்கய்யரவர்கள் மேற்கண்ட திருத்த பிரேரணையைக் கொண்டு வந்து ஒருவாறு நிறைவேற்றி யிருக்கிறார்கள், அதாவது,

ஆசார நிபந்தனைகள் விரோதமாக இருக்குமாகில் அவைகளை மாற்ற இந்துக்களுக்குச் சக்தியிருக்குமாகில் மாற்ற வேண்டும் என்பதே.

இந்தத் தீர்மானத்தில் திருத்தியபாகத்தை ஆதித்தீர்மானத்திலுள்ள சாஸ்திரங்களில் கட்டுப்பாடு இருக்குமாயின் அவைகளை மாற்றவும் என்ற பாகத்தை எடுத்து விட்டு சேர்த்து வாசித்தால் பிராமணர்களின் தந்திரமும் மோசமும் வெளிப் படுவதோடு பிராமணரல்லாதாரை எவ்வளவு ஏமாளிகளாக நினைத்திருக்கிறார்க ளென்பதும் அந்தமாயவலையில் விழுந்து நிலைதடுமாறிப் போகும் பிராமணரல்லாதார் நிலைமையும் வெளியாகும்.

ஸ்ரீமான் வைத்தியநாதய்யர் பேசும்போது பாண்டிய நாட்டில் சில ஆலயங்களில் தடை ஏற்பட்டதை நீக்கும் கருத்தில் மாறுபாடில்லை என்றும் ஒருவிஷயம் மட்டும் அக்கிரமமாகவும், அநீதமாகவும் இருக்கிறது. சாஸ்திரங்களில் இதற்கு ஆதாரமே யில்லை என்றும் சொல்லிவிட்டு சாஸ்திரத்தை மாற்றவேண்டுமென்ற ஷரா இருக்கக் கூடாதென்கிறார். அந்தமட்டும் நிறுத்திக் கொண்டாரா! இல்லை, முகம்மதியர்களை தம்முடைய கக்ஷியை ஆதரிக்கும்படி செய்வதற்காக முகம்மதிய சாஸ்திரத்தில் மாற்றஞ் செய்யும்படி கேட்டால் அவர்கள் ஒப்புக் கொண்டிருப்பார்களா என்கிறார். அம்மட்டுமாவது விட்டாரா வென்றால் அடுத்து கட்சிக்கு ஆள்ச் சேர்ப்பதுபோல்த் தெரிகிறது. மறவர்கள், கள்ளர்கள் இருக்குமிடங்களில் காங்கரஸ் நுழைய வில்லை யென்று நாடார்களுக்கும், மறவர்களுக்கும் இருக்கும் பழைய விரோதங்கள் கொஞ்சம் கொஞ்சமாய் மறைந்து கொண்டு வருவதை மனதில் வைத்து மறவர்களையும், கள்ளர்களையும் நாடார்களுக்கு விரோதம் பண்ணும்படி தூண்டுகிறார். இவருடைய சாஸ்திரங்களெல்லாம் மறவர்கள் கள்ளர்களிடத்தில் இன்னும்புகாமலிருப்பதாலேயே அவர்களுக்குள்ளாவது கட்டுப்பாடாக இருக்கிறார்கள். அவர்களுக்குள்ளும் புகுந்து விட்டாலோ அந்த ஜாதியிலுங்கூட பல பிரிவுகளுண்டாக்கி விடு மென்று நாம் குறிப்பிடுகிறோம்.

இனி சாஸ்திரம் சாஸ்திரம் என்று அடித்துக்கொள்ளும் பிராமணர்களையும், பிராமணரல்லாதாரையும் ஒன்று கேள்க்கிறோம்:- பிராமணர்களுடைய தர்மமானது வேதம் ஓதுதலும் வேள்வி செய்தலும் நித்யகர்மாநுஷ்டானங்களைத் தவறாது அனுஷ்டித்து யாசித்துஉண்ண வேண்டியதா? அல்லது காலையில் 7-அல்லது 8-மணிக்கு எழுந்து காப்பி சாப்பிட்டுக் கோர்ட்டுக்குப்போய் எத்தனை பொய்ச்சாட்சிகளை விசாரிக்க வேண்டிய தென்று தனிக்கை செய்து விட்டு பத்து மணிக்குப் பலவிதமான வெளி நாட்டு ஆகாரங்களைப் புசித்து விட்டு புசித்த ஆகாரம் ஜீரணிக்கச் சீமைச் சாராயங்களைச் சாப்பிட்டு மோட்டார்க்கார்களில் குஷாலாகப் போகும்போது எத்தனை ஜீவராசிகள் சக்கரத்துள்ளே அகப்பட்டு கஷ்டப்படு மென்ற ஜீவகருணையற்றுப் போவதும் டம்பாச்சாரிகளாய் நாகரீகலோலர்களாய்ச் சோமிலுக்குந் தர்மகர்த்தாவாக நாங்கள் தானிருக்க வேண்டு மென்பதும் திரிவதா என்பதே. ஆனால்,

சிலர் கமுதிக் கோவில்க் கேஸ் ஒரு சாஸ்திர மென்று சொல்லுவார்களோ என்னவோ. சாத்தூரில் நடந்த மதுரை இராமநாதபுரம் ஜில்லா மகாநாட்டிலும் ஒரு ஐயங்கார் இதையே சொன்னார். அப்பேர்க்கொற்றவர்கள் சித்தூர் ஜில்லா தீர்ப்பை சிந்தித்துப் பார்க்கட்டும். கமுதிக் கோயில்க் கேஸில் சாட்சி சொன்ன இப்போது மகாமஹோபாத்தியாய ரென்று பட்டம் பெற்றிருக்கிறவே. சாமிநாதய்யரையும் இநாகவையங்காரையும் மதுரைதமிழ் க்ஷத்திரிய மித்திரன்பத்திராதிபர், இலக்கண விஷயமாய்க் கேட்டகேள்விகளுக்கு இதுவரையும் அவராவது மற்ற வித்துவான்களாவது பதில்ச் சொல்ல முன்வர வில்லை யென்பதை அறிவார்களா ?

சென்ற சில வருஷங்களுக்கு முன்னர் காங்கரஸ்க் கொள்கையானது நமக்குப் பெரிய உத்தியோகங்களும் உயர்ந்த சம்பளங்களும் பெறுவதே கொள்கையாகவும் அதுவே சுயராஜ்ய மென்பதாகவும், எண்ணிக் கொண்டு தீர்மானிந்து வந்தது. மகாத்மா காந்தியின் கொள்கை வந்தபின் காங்கரஸ்பழைய திட்டங்கள் பெரும்பாலும் மாற்றப்பட்டு நம்முடைய மதக்கோட்பாடுகளையும் ஆசாரசீர்திருத்தங்களையும் பிரயோசனமாகச் செய்து ஜன நிர்மாண வேலைகளைத் துவக்கி நம்மை நாமே ஆண்டு கொள்வதே சுயராஜ்யமென்ற தத்துவத்தைக் கொண்டும் கவர்னர் உத்தியோகங்களையும், அலட்சியமாய்க்கருதும் நிலைமையிலிருந்து வருகிறது. இந்தியாவிலுள்ள சகல மதத்தையும் தன்னுள்ளடக்கிக் கொண்டதாயிருக்கும் காங்கரஸ் இந்தியாவுக்கு வெளியிலுள்ள துருக்கிக்கும் மதானுதாபங்காட்டுகிறது. அதுபோல் காங்கரஸ்க் கிளைகளாயுள்ள நமது மாகாண மகாநாடுகளும், கிலாபத்துக்கும், பஞ்சாப்பக்கொலைக்கும், பரிதாபங்காட்டுவதே முறையெனக் கொண்டு நடந்து வருகிறது. அந்தந்த மாகாண மகாநாடுகளே அங்கங்குள்ள பல வகுப்பினர்களுடைய குறைகளையும் கவனிக்கவேண்டியது அவசியம். அப்படிக் கவனித்துச் செய்ய வேண்டியதைச் செய்யத் தவறினால் வாயால்த்தானே பேசுகிறோம். கையினால் மெய்யாகச் செய்யவா போகிறோ மென்று மற்றொருமாகாணத்துக்கு அனுதாபத் தீர்மானங்கள் செய்கிறதாகவே முடியும்.

காங்கரஸில் மதசம்பந்தத்தைக் கலந்து சாஸ்திரங்களை மாற்றப்பார்க்கின்றார்களே! என மனம் வருந்தும் அறிவுடையோர் பிரஸ்தாபதீர்மானத்துக்கு முன்னரே தீண்டாமையை ஒழிப்பதெனக்கொண்டு வந்த தீர்மானத்தில் தாழ்ந்தவகுப்பினர்களின் தற்போதைய பொருளாதார ஜனசமூகஸ்திதியை சீர்படுத்துவதற்கு காங்கரஸ்க் கமிட்டிகளுக்குப் பணம் முதலிய உதவிகள் செய்தும் மதத்தினாலும் பழக்கங்களினாலும் ஏற்படும் தடைகளை நீக்கவும் முயற்சிசெய்யும்படி என்று கண்டிருக்கிறதே ? தீண்டாமையை ஒழிப்பதில் மதத்தைக் கொண்டு நுழைய விட்டபோது ஒருவரேனும் தடை செய்தாரில்லையே அதை ஒப்புக்கொண்ட கனம் ஐயர்மார்கள் நாடார்கள்தீர்மானத்தில்சாஸ்திரம் நுழைந்ததைக்கண்டாத்திரப்படுவானேன்? மதம் என்பது சாஸ்திரத்தைச் சாரா[illegible] போலும்!

தேசிய வியக்கம் தோன்றினகால்ம் முதற் கொண்டே இத்தீர்மானம் மாகாண சபைகளிலும் ஜில்லாச்சபைகளிலும், தாலூகாச் சபைகளிலும் பிரஸ்தாபிக்கபபட்டு வருகின்றது. வந்தாலும் ஒரு விதமான முடிவுக்குத்தான் வரவில்லை. இதன் முடிவுக்குள்த்தான் சுயராஜ்யம் இருக்கிறதென்று மகாத்மா காந்தி சாபமிட்டிருக்கிறார். அச்சாபத்தை தெளிவுபடக் காட்டியிருக்கிறார்கள், ஸ்ரீமான்களான கலியாண சுந்தரமுதலியாரும், இராமசாமி நாயக்கரும். தேசத்தில் தீண்டாமையை ஒழிக்க வேண்டு மென்ற உணர்ச்சி யுண்டாகியும்கூட ஜாதித்துவேஷம் இன்னுந்தணிந்த பாடில்லையே என்று விசனிக்கின்றோம்.

# குறிப்புகள்.

### கனம் S. ஸ்ரீனிவாசய்யங்காரவர்கள்

1918-ஆம் வருஷத்தில் மதுரையில் கூடிய 5-வது நாடார் மகாநாட்டில் கனம் S. ஸ்ரீனிவாசய்யங்காரவர்கள் தலைமை வகித்து பேசிய முக்கிய சாராம்சத்தை மற்றொரு இடத்தில் பிரசுரித்திருக்கிறோம்.

சுமார் நான்கு வருஷத்திற்கு முன்பு கனம் அய்யங்காரவர்கள் நாடார்கள் மகாநாட்டிலிருந்து பேசியவற்றையும், மதுரை இராமனாதபுரம் ஜில்லா மகாநாட்டிலிருந்துநாடார்களுக்குபோதிக்கும் போதனையையும் தேசாபிமானிகளே! சீர்தூக்கி மனித சுவாப மாறுதலின் தன்மையைக் கவனித்து பார்ப்பார்கள் என்று நினைக்கிறோம்.

### பட்டவர்க்கு உண்வேலன்.

நமது நாடார் மகாஜன சங்கம் ஏற்பட்டு, இதுவரை செய்துவந்த வேலைக்கு தக்க பலனையடைந்து அநுபவிக்கின்றோமாயினும், இன்னும் அதிகமாக வேலை செய்ய வேண்டிய திருக்கின்றது. நம்குலத்தவர்கள் வசித்துக் கொண்டிருக்கும் பல பகுதிகளில் இன்னும் நமது சங்கத்தின் பிரஸ்தாபமே எட்டாமலிருக்கிறது. ஆகையால் நமது மகாஜன சங்கத்தார் அதிகமான பிரசாரர்களை நியமித்து, சங்கப் பிரசாரம் வெகு எளிதாய் நடைபெறுமாறு வேலைசெய்வார்கள் என்று நம்புகின்றோம்.

### பர்மா சட்ட சபைத் தேறுதலில் நங்குலப் பிரதிநிதி.

தென்னாட்டில் ஒழுக்கமுள்ள ஒரு கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்து "திரைகடலோடியுந் திரவியந் தேடு" என்னும் முதுமொழிப்படி வெகு காலத்திற்கு முன்னமே பர்மா தேசத்துக்குச் சென்று வியாபார துறையிலிறங்கி, திரண்ட ஆஸ்தியையுடையவரும், பர்மா பொது ஜனங்களாலும் கவர்ன்மெண்டாராலும் நன்கு மதிக்கப்பெற்றவரும், சிவகாசியில் கூடிய நமது நாடார் மகாஜன சங்க எட்டாவது கான்பரன்சுக்கு தலைமை வகிக்க, கனம் ராஜா அவர்களுக்கு அடுத்தபடியாக நம் மகா ஜனங்களால் தேர்ந்து எடுக்கப் பட்டவருமான ஸ்ரீமான் V. A. வேல் ஜோசப் நாடாரவர்கள் பர்மா சட்டசபைக்கு பொது ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் முழுவிபரமும் நமக்கு கிடைத்திருக்கிறது. அதன் முழுவிபரமும் அடுத்தமித்திரனில் பிரசுரிக்கப்படும்.

### நமது கௌரவ மானேஜர்.

நமது மித்திரன் கௌரவ மானேஜர், ஸ்ரீமான் T. கருப்பையா பிள்ளையவர்கள் கொழும்பு, நெ. 26 நாரிஸ் ரோடு (No. 26 Norris road Colombo) என்ற விடத்தில் தங்கியிருக்கிறார்கள் அவருக்குக் கடிதமெழுத விரும்பும் நேயர்கள் மேற்கண்ட விலாசத்திற்கு எழுதிக் கொள்ளலாம். மறுபடியும் அட்ரஸ் மாறும் விடத்தில் மித்திரன் மூலமாய் கனம் பிள்ளையவர்கள் விலாசத்தை தெரிவிப்போம். ஆனால் எப்போதும் நமது ஆபீஸ் மேல் பார்த்து கனம் பிள்ளையவர்களுக்கு கடிதமெழுதப்படுமானால் காலம் [illegible]ம் கிடைக்கும்.

# வாரத்திரட்டு

### பம்பாய் முனிசிபாலிட்டி

1921-22 வருஷத்தில் 30 லக்ஷம் ரூபாய் முந்திய வருஷத்தைவிட அதிக வருமானம் கிடைத்தது. மொத்தம் வரும்படி 2-கோடி 3½ லக்ஷத்தில், செலவு 2 கோடி 24½ லக்ஷம். இதில் கல்விக்காக 20 லக்ஷம் ரூபாய்தான் செலவிடப்பட்டிருக்கிறது. என்றாலும் முந்திய வருஷத்தைப்பார்க்கிலும் இவ்வருஷத்தில் 3½ லக்ஷம் அதிகமாகவே கல்வி விஷயத்தில் செலவிடப் பட்டிருப்பதை அறிந்து சந்தோஷிக்கப்பட வேண்டியதே.

### சுதேசியம்.

புதுக்கோட்டை, சமஸ்தான .... நவம்பர் மீ 17ல் ஆலங்குடியில் கூடிய கூட்டத்தில் கதரின் முக்கியத்தை அறிந்து சகலரும் அரசாங்க உத்தியோகஸ்தர்களும் உள்பட சகலரும் சுதேசி .... கீளேயே உபயோகிக்க வேணுமென்றும் ....த்தை உடுத்த வேணுமென்றும் தீர்மானமாகி யிருக்கிறது.

### மலையாளக் கஷ்ட நிவர்த்திக் கமிட்டி.

மலையாளக் கஷ்ட நிவர்த்திக்காக ஏற்படுத்தப் பட்ட மத்தியக் கமிட்டியின் வருஷாந்திரக் கூட்டம் நவம்பர் மீ 10ல் கூடியபோது அதன் அறிக்கை வாசிக்கப்பட்டது. அதில் கமிட்டிக்கு மொத்த வரவு ரூ 307696-16-8 இன்னும் இது தவிர சாமான்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ரூ 60000 பெறுமான முன்னணி அநேகமாக பம்பாய் ஆலை சொந்தக்காரர்களால் கொடுக்கப்பட்டது. மொத்தச் செலவு ரூ 272094-2-5 போக மீதி ரூ 35592-13-3 பாங்கியில் இருக்கிறதாகத் தெரிகிறது.

### மதுரை.

கீழ் ஆவணி மூலவீதியிலுள்ள முனிசிபல் டிஸ்பென் ... பக்கம் பிளேக்கிருமிகளைக்கொண்ட எலிகள் செத்து விழுந்த காரணமாக அந்நோய் பக்க இடங்களிலும் பரவுமென்று பயந்து, ஜில்லாக் கலெக்டரவர்கள் நான்கு ஆவணி மூல வீதிக்குள்ளும் கிருஷ்ணன் கோவில் சந்து, வடக்குமாசி வீதி. தளவாய் அக்ரஹாரம் இவற்றிலும் வசிப்பவர்கள் நவம்பர் மாதத்துக்குள் பிளேக் ஊசி குத்திக்கொள்ளவேண்டும் அல்லது வீடுகளை காலிசெய்து, மதுரை டிவிஷனல் ஆபீசரால் குறிக்கப்படும் இடத்தில் குடியிருக்கவேண்டும் என்று ஒரு விளம்பரம் பிரசுரித்திருக்கிறார்கள். இந்த நோய் பரவாமலிருக்க அவர்கள் ... எடுத்துக் கொள்ளப்பட்டால் அவசியமானதே.

### கவர்னர் சுற்றுப் பிரயாணம்

நமது சென்னை மாகாணக் கவர்னர் வில்லிங்டன் பிரபு 2-11-22-ந் தேதியில் வெங்கடகிரிக்கு விஜயஞ்செய்தார்கள். வெங்கடகிரி ராஜா அவர்களால் வெகு குதூகலமாக வரவேற்கப்பட்டாராம். அன்று நகர் முழுவதும் அழகாய் அலங்கரிக்கப்பட்டிருந்ததாம். அரசர்கள் கட்டடத்திற்கு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார். தெருக்களின் இருபக்கங்களிலும் ஜனங்கள் கும்பலாயிருந்தார்களாம்.

### ஆதித்திராவிடர் மகாநாடு

... செங்கல்பட்டில் 19-11-22-ந் தேதியில் ஸ்ரீமான் வி. ராஜரத்தினம் பிள்ளை அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் கூடிபெற்று, ஏராளமான பிரதிநிதிகள் விஜயஞ் செய்தார்கள், பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

### வேலை யில்லாதவர்கள்.

இங்கிலாந்தில் வெகு ஜனங்கள் வேலை யில்லாமல் வயிற்றுப் பிழைப்புக்கு வகையும் அறியாமல், தேசத்தின் பல பாகங்களிருந்தும் தலை நகரமாகிய லண்டனுக்கு வந்துகொண்டிருக்கிறார்களாம். சென்ற வாரத்தில் அவர்கள் பிரதம மந்திரியான போனர்லாவை பேட்டிகண்டு பேச ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இவர்களின் பெரும்பான்மையோர் வாலிபர்களாயிருக்கிறார்களாம். வழியில் சிற்சில இடங்களில் ஜனங்களால் உபசரிக்கப் பட்டார்களாம் தங்களுக்கு சரியான ஏற்பாடு செய்யாதவரை அவர்கள் லண்டன் மாநகரை விட்டுபோகமாட்டோமென்று வாதிக்கிறார்களாம்.

# இந்தியன் நேஷனல் காங்கரஸும், நாடார்களும்.

முன் தொடர்ச்சி.

தாதாபாய் நௌரோஜி, கோபால கிருஷ்ண கோகலே முதலான தேசபக்தர்கள் காலஞ் சென்ற பிறகு காங்கரஸானது, அதிவீரர்களும் தீவிரக் கட்சியாரென்று சொல்லப்பட்டு வந்த பால கங்காதர திலகரின் ஆதிக்கத்திலிருந்தது. அக்காலத்தில் மஹாத்மா காந்தியவர்கள் மிகவும் நிதானக் கக்ஷியாராயிருந்து, அப்போது நடந்துவந்த ஐரோப்பிய யுத்தத்திற்கு படைசேர்க்க அனுப்புவதற்கும் பணஞ் சேர்த்து உதவி செய்வதற்கும் பெரிய தூண்டுகோலாயிருந்து, பிரிட்டிஷ் ராஜாங்கத்துக்கு எவ்வளவு ஒத்தாசை இந்தியதேசத்தாரால் செய்யமுடியுமோ அவ்வளவு செய்யும்படி ஏற்பாடு செய்துகொண்டிருந்தார்.

1918-ம் வருஷத்தில் முடிவடைந்த யுத்தத்தில், இந்தியர்களால் செய்திருக்கிற ஒத்தாசை ஒவ்வொன்றும் பெரும்பாலும் இங்கிலாந்திலுள்ள ஐரோப்பிய ஜனங்களை கவர்ந்து கொண்டிருந்தது. அப்போது, அதிகாரத்திலிருந்த முதல் மந்திரி லாயிட் ஜார்ஜ் அவர்களால் இந்தியாவுக்கு சுயராஜ்யம் கொடுக்கப்படுமென்று இங்கிலாந்தின் லக்ஷியமென்று, ... அதற்கு பாதைகள் திறக்கப்படுமென்றும் விளம்பரஞ் செய்யப்பட்டது.

யுத்தகாலத்தில் சகல ஜனங்களும் பத்திரிகைவாசிக்க ஆரம்பித்ததிலிருந்து ராஜாங்கங்களின் பலாபலன்கள் எவ்விதமிருக்கின்றதென்றும், எந்தத் தொழில் எந்த நாட்டாரால் செய்யப் படுகிறதென்றும், நம் நாடு என்ன நிலைமையிலிருக்கிறதென்றும் அறிந்து கொண்டார்கள். அதிலிருந்து இந்திய ஜனங்களுக்கும் சுயராஜ்ய தாகம் அதிகரித்தது. இது சமயத்தில், பிரிட்டிஷாரும் இந்தியாவுக்கு 1919 வருஷத்தில், சில சீர்திருத்தங்களை வழங்கினார்கள்.

அதன் பலனாகவே, இந்தியாவில் பல கக்ஷிகள் ஏற்பட்டு, மிதவாதக் கக்ஷியார் மறுபடியும் பிரிந்துபோய்விட்டார்கள். அது சமயம் தீவிர கக்ஷியின் தலைவர் லோகமான்ய பால கங்காதர திலகர் காலஞ் சென்றுவிட்டார்; மஹாத்மா காந்தி தேசத்தின் தலைவராய் முன்வந்தார். ரௌலட் சட்டத்தை, இந்திய மெம்பர்கள் எல்லாம் ஒரே விதமாய் எதிர்த்தும், இந்திய கவர்ன்மெண்டார் நிறைவேற்றிவிட்டார்கள். தேசத்தில் எங்கு பார்த்தாலும் கிளர்ச்சி ஏற்பட்டது. பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துக்கு ஒத்தாசையாய், இந்தியர்கள் உடல் பொருள் ஆவி மூன்றையும் அர்ப்பணஞ்செய்து கொடுத்ததற்காகவா, அடக்குமுறைகள் பலப்படுத்தப் படுகின்றன வென்று ஒவ்வொருவரும் கேட்க ஆரம்பித்தார்கள். தேசத்திற்காக இனி சத்தியாக்கிரகமாவதைத் தவிர, வேறு எவ்விதமான பரிகாரமும் நமக்கு இந்நிலைமையில் பிரிட்டிஷாரை வழிக்குக் கொண்டுவராதென்று மஹாத்மா காந்தி உபதேசஞ் செய்தார். காங்கரஸ் மஹா சபையும் அதை ஆதரித்தது. சத்தியாக்கிரஹம் என்றபேர் கேட்டபொழுதே சில இங்கிலீஷ்காரர்களுக்கு கோபமுண்டாயிற்று. அதுவுமன்றி ஜெனரல் டையர் பஞ்சாப் மாகாணத்தில், அமிர்தசரஸில் இந்தியர்களையும், குழந்தைகளையும், வியாதிக்காரர்களையுங்கூட நிராயுதபாணிகளாயிருந்த நிலைமையில், அடைத்துவைத்துக் கொண்டு சுட்டுக் கொன்றார். இந்தியர்களின் இரத்தம் கொதிப்படைந்தது.

இதன் பலமாய் பிரிட்டிஷாரிடத்திலுள்ள நீதியில் நம்பிக்கைவைத்திருந்த அநேக இந்தியர்களும் நம்பிக்கை இழந்தார்கள். இந்த கவர்ன்மெண்டுடன் ஒத்துழைக்கக் கூடாதென்று 1920-ம் வருஷத்தில் காங்கரஸ் தீர்மானித்து விட்டதுடன் காங்கரஸின் கொள்கைகளிலும் சில மாற்றப்பட்டு ஆசார சீர்திருத்தக் கொள்கைகளையும் காங்கரஸின் லட்சியங்களுடன் பிணைத்துக் கொண்டது.

இவ்வளவு ஆர்ப்பாட்டங்களும் தேசத்தில் நடந்துகொண்டிருப்பதையும், பல ஜாதியாரும் ராஜிய விஷயப் பிரக்ஞையுள்ளவர்களாய் இராஜாங்கம் நடக்கிற மாதிரியையும், இனி எவ்விதம் நடக்கவேண்டுமென்கிற விஷயத்தையும், காங்கரஸ் மஹாசபையின் பல கிளைகளாக மாகாண கான்பரன்ஸ், ஜில்லாக் கான்பரன்ஸ், தாலுகா சபை கிராமசபை, என்று பிரிவுகளாயிருந்து தீர்மானித்து வருவதையும் நமது ஜாதியார்கள் அறிந்து கொண்டிருந்தும் நாம் கட்டுப்படாததினால், காங்கரஸ் செய்கிற தீர்மானம் நம்மைக் கட்டுப்படுத்தாதென்று வாழாவிருப்பது சரிதானா வென்று யோசனை செய்து பார்க்கவேண்டிய காலம் வந்துவிட்டது.

காங்கரஸ் செய்யும் தீர்மானங்களால் தேசத்துக்கு நன்மையோ, தீமையோ ஏற்பட்டால் அதினாலேற்படும் சாதக பாதகங்கள் நம்மைத் தாக்காதா? பாதகங்களேற்படுமானால் அது நம்மையுந்தாக்குமன்றோ? அவ்வித பாதகமான தீர்மானங்களாவது நிறைவேறாமலிருப்பதற்கு நாம் காங்கரஸில் மெம்பர்களாய்ச் சேர்ந்து ஓட்டுப்பலத்தால் எதிர்த்தாலல்லாமல் பிற்பாடு ஏமாந்து போய் விட்டோமே யென்று வருந்த நேரிடலாம். காலாகாலங்களில் எச்சரிக்கையாய் வேலை செய்வதே நமது கடமையும், ஞாயமுமாகும்.

N. C. பாண்டியன்.

# பழமொழிக் களஞ்சியம்.

**சிவபூசை வேளையில் கரடி புகுந்தது போல்** இந்தியர், வரிப் பளுவு, தாங்க மாட்டாமல், விட்டகூக்குரல் சட்டசபை பிரதிநிதிகளுக்கு எட்டி, அவர்கள் போட்ட சத்தம் நமது இந்தியாக் கவர்ன்மெண்டு முட்டி: இப்போது என்ன செய்வதென்று ஆலோசித்த இந்தியக் கவர்ன்மெண்டார், இனிச் சிக்கனக்கமிட்டி ஒன்று நியமிக்க வேண்டியது தான் என்று முடிவுக்கு வந்தார்கள். அதன்படி, லார்டு இன்சிகேப் என்றவர் தலைமையின் கீழ் சிக்கனக்கமிட்டி ஒன்று ஏற்படுத்தி எந்த எந்த செலவு இனங்களை குறைக்கலாமென்று தீர்க்காலோசனை செய்து கொண்டிருக்கும்போது, மை கமிட்டியின் தலைவரான லார்டு இன்சிகேபுக்கு ஐரோப்பிய சங்கத்தார், இந்தியாவுக்கு இப்போது அதிகவரி ஏற்பட்டிருக்கிறதென்று சொல்ல முடியாது, இன்னும் வரி போடலாம், என்று துர்போதனைகளையும் செய்கிறார்கள். என்னே இவர்களின் புத்திப்போக்கு! இப்போது எதற்காக இந்தக்கமிட்டி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. எப்படிப்பட்ட சிபார்சு செய்ய வேண்டும் என்று கொஞ்சங் கூட யோசிக்கக் கூடாதா? இனி வரிப் போடாமல் எந்தச் செலவு இனங்களில் செலவைக் குறைத்தால் நிர்வாகம் சரியாய் நடைபெறும் என்று, யோசனை சொல்லுவதற்கு ஏற்பட்ட கமிட்டிக்கு, வரிப்போடுவதற்கு இந்த ஐரோப்பிய புத்திமான்கள் யோசனை சொல்லுகிறார்கள். இவர்களின் புத்தியே புத்தி! நல்ல புத்தி!! வர்ணிக்க முடியாத புத்தி !!! எங்கும் விலைக்கு வாங்க முடியாத புத்தி !!! இப்படிப்பட்ட யோசனைக்காரர்களை, இந்தியக் கவர்ன்மெண்டார் சிக்கனக்கமிட்டிக்கு மெம்பர்களாய் தேர்ந்தெடுக்காததுபற்றி பெரிதும் விசனிக்கிறோம்,

• • •

**யானை விற்றால் யானை லாபம், பானை விற்றால் பானை லாபம்** என்பது போல் எவ்வளவு முதல் போட்டு வியாபாரஞ் செய்கிறோமோ அவ்வளவுதான் லாபம் கிடைக்கும் அதிகமான மூலதனத்துடன் நாம் வியாபாரஞ் செய்வோமாகில் அதிக லாபம் கிடைக்காமலிருக்காது. ஐரோப்பியர்கள் எத்தனையோ கூட்டுக்கம்பெனிகள் ஸ்தாபித்து ஏராளமான மூலதனம் போட்டு மிதமிஞ்சின லாபத்தை அடைகிறார்கள். மேலும் இப்போது ஐரோப்பியர்கள் ராஜரீகஞ் செய்து கொண்டிருப்பதற்கும். அவர்களுடைய வியாபார விருத்தி தான் காரணமென்பதை ஆதி சரித்திர பூர்வமாய் கவனித்தவர்களுக்கு நன்கு புலப்படும். நாடார் சமூகத்தவரில் பெரும்பான்மையோர் விவசாயிகளாயும் பெரிய வியாபாரிகளாயிருந்தும், அவர்களுக்குக் கூட்டுக் கம்பெனிகளின் மேல் நம்பிக்கையில்லை என்றே தோன்றுகிறது. கூட்டுக் கம்பெனியின் மேன்மையும் அதன் லாபத்தின் தன்மையையும் அறிந்திருப்பார்களானால்! நாடார்களுக்குப்பொதுவாக ஏற்படுத்தப் பட்டிருக்கும் கூட்டுக் கம்பெனியான நாடார் பாங்கில் "பங்குகள் காலியாயிருக்கின்றன பாங்கில் வந்து சேருங்கள் !! நல்லலாபத்தை அடையுங்கள் !!! 'என்று பேப்பர்கள் மூலமாயும், பிரசாரகர்கள் மூலமாயும், பறைசாற்றுதல் இன்னும் நின்றபாடில்லையே.

**பகாரர்க்கு ஆதி வெகுஜன விரோதி** என்றபடி உள்ளதைச் சொன்னால் யாருக்கும் பொல்லாப்புத்தான். உண்மையைச் சொன்னால் ஒத்துக் கொண்டு அதன்படி ஒழுகுவதல்லவா உத்தமமான காரியம். அவன் சொல்லி நாம் கேட்கிறதா வென்று வீரத்துடன் எழுந்து வேகமாய் நின்றால், யதார்த்தத்தைச் சொல்லி விரோதத்தைச் சம்பாதித்துக் கொள்ளவேண்டியதாயல்லவோ இருக்கிறது. உலகத்திலுள்ள எல்லா பாகத்திலும் எல்லாத் தோரணையிலும் அத்தன்மை இருக்கிறதென்றால் இதைப்பற்றிப் பேசுவானேன். உலகம் பலவிதத்தில் இது ஒரு விதமென்று எண்ண வேண்டியதானே.

• • •

**வரிவிழுந்த புலியைப் பார்த்து நரியும் கொள்ளிக்கட்டை எடுத்து சுட்டுக் கொண்டதாம்** என்பதைப் போல இங்கிலாந்தில் ஜனப்பிரதிநிதிகளின் ஆதிக்கம் அதிகமிருப்பதால், ஜனங்கள் தங்களுக்கு இஷ்டப்பட்ட சமயத்தில் வரியை அதிகம் கொடுக்கிறார்கள். ஜனங்கள் அதிகமாகக் கொடுக்க இஷ்டப் படாவிட்டால் சிக்கனக்கமிட்டி ஏற்படுத்தி செலவினங்களை குறைக்க ஜனப்பிரதிநிதிகள் கவர்ன்மெண்டுக்கு சிபார்சு செய்கிறார்கள், அதன் படியும் மகாஜனங்களின் இஷ்டம் போல் காரியம் பூர்த்தியாகிறது. இதை நினைத்துக்கொண்டு, ஜனப் பிரதிநிதிகளுக்கு சிறிதும் செல்வாக்கில்லாத இந்தியாவிலும் சிக்கனக்கமிட்டி ஒன்று ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. சட்டசபையில் பிரதிநிதிகளில் பெரும்பான்மையோர் ரயில்வரி அதிகப்படுத்தக்கூடாது ஸ்டாம்பு டூட்டியை உயர்த்தக் கூடாது என்று ஒவ்வொரு உயர் இனங்களை தடுத்ததோடு இராணுவத்தின் செலவைக் குறைக்க வேண்டு மென்றும் மற்ற இதரசெலவுஇனங்களில் குறைக்க வேண்டியவகளைகுறித்துகத்தியபோதெல்லாம்கவர்ன்மெண்டு காதில் வாங்காமல் பின்சிக்கனக்கமிட்டி ஏற்படுத்தியபுதுமை ஆச்சரியமாய் தான் இருக்கிறது. சட்டசபை மெம்பர்கள் சொல்லாத புதிய யோசனையை சிக்கனக் கமிட்டி என்ன தான் சொல்லப் போகிறதோ அதை பார்ப்போம். இங்கிலாந்தில்போல் இந்தியாவிலும் சிக்கன கமிட்டி ஏற்பட்டிருக்கிறது என்ற பெயரில் குறையிருக்காது. ஆனால் செலவு இனங்களை சிக்கனம் பண்ணவந்த சிக்கனக்கமிட்டிக்கு, செலவு செய்ததுதான் மிச்சம்!

• • •

**முகம் சந்திரபிம்பம் அகம் பாம்பின் விஷம்** என்றது போலதானிருக்கிறது தேச நன்மைக்கு உழைக்கும் காங்கரஸ் வாதிகளில் சிலரின் தன்மையும் கொள்கையும். வெளிக்கு தேசாபிமானிகள் போல்வேடிக்கைப்பேச்சுப் பேசிவிட்டு, காரியத்தில் காட்டும்படி நெருக்கினால் கள்ளத்தனமும், அகம்பாவமும், துவேஷ புத்தியும், ஜாதிப் பயித்தியமும் கொண்டவர்களாய்த் தானிருக்கிறார்கள். தமிழ் நாட்டிலுள்ள காங்கரஸ் வாதிகளில் சிலரின் தன்மையை திருப்பூர் மாகாண மகாநாட்டில் பார்த்துவிட்டோம் ஆனால் காங்கரஸ் வாதிகள் எல்லோரையும் ஏகோபித்து இப்படிச் சொல்லுவதற்கில்லை.

இக்கூட்டத்தில் ஸ்ரீமான் இராமசாமி நாயகர் ஸ்ரீமான் கலியாணசுந்தர முதலியாரிவர்களைப்போல் நான்கு நல்ல மனிதர்களு மில்லாமலில்லை.

# அறிவிப்பு.

தஞ்சை, திருச்சி, கோயம்புத்தூர் முதலிய ஜில்லாக்களிலிருக்கும் நமது சந்தா நேயர்களுக்கு இன்னும் வி. பி. யை தொடர்ந்து அனுப்பிக்கொண்டிருப்பதோடு. மதுரை, இராமநாதபுரம் திருநெல்வேலி முதலிய ஜில்லாக்களிலுள்ள. மதுரை, விருதுபட்டி, சாத்தூர் சிவகாசி, தூத்துக்குடி முதலிய பிரபல இடங்களிலுள்ள நமது சந்தா நேயர்களுக்கு தவிர, மற்ற இதர இடங்களிலுள்ள நமது சந்தா நேயர்களுக்கு டிசம்பர் மீ 3 தேதி முதல் வி. பி. யை அனுப்ப உத்தேசித்திருக்கிறோம். ஆகையால் நமது மித்திராபிமானிகள் வி. பி. யை தாமதிக்காமல் பெற்றுக் கொண்டு மித்திரன் அபிவிருத்தியை நாடப் பிரார்த்திக்கின்றோம்.

மானேஜர்.

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

## தூத்துக்குடி,
# நாடார் பாங்கும், நமது கடமையும்.

(வழியப் பிரசுரசபை.)

க்ஷத்திரியகுல உத்தமர்காள்!

நமது ஆறுவது கான்பரன்ஸ் தீர்மானப் பிரகாரம் தூத்துக்குடியில் "நாடார் பாங் லிமிட்டெட்" ஸ்தாபித்து சுமார் மூன்று வருஷமாகிறது. இன்னும் அநேக பிரபுக்கள் பங்கு எடுக்காமல் பராமுகமாகயிருப்பது விசாரிக்கத்தக்க விஷயமாகும். பாங்கியானது சாமான்யமானதல்ல நமது ஜனசமூகத்துக்கு செல்வாக்கைக் கொடுக்கும் கற்பகதருவுக்குச் சமானமாகும். வர்த்தகர்களும், விவசாயிகளும், கைத்தொழிலாளர்களும், தங்கள் தொழில்களை விரிவாக நடத்தி அபிவிருத்திசெய்து விசேஷ லாபத்தையடைவதற்கு நிரம்பவும் அனுகூலத்தைக் கொடுக்கக் கூடியது. மேல்நாட்டினர் தங்கள் வியாபாரங்களையும் கைத்தொழில்களையும் அபிவிருத்தி செய்து அபரிமிதமான பணத்தைச் சம்பாதித்துக் கொண்டிருப்பதற்கு அவர்கள் ஸ்தாபித்திருக்கும் பாங்கிகளே முக்கிய காரணமாகும். நம்மவர்களின் தருமப் பொதுப் பணங்கள், மைனர்கள், விதவைகள், ஆதாரமற்றவர்கள், தங்கள் பணத்தைக் கவலையின்றி பந்தோபஸ்தாகப்போட்டு வைக்கவும் காலக்கிரமத்தில் வட்டி அசல் தொகையை தேவையான சமயம் பெற்றுக்கொள்ளவும் நமது பாங்கியே சிறந்த இடமாகும்.

நாம் நமது ஜவேஜ் பூராவும் போட்டு ஒரே தொழிலைச் செய்வோமாயின் எப்பொழுதும் லாபமே கிடைத்துக் கொண்டிருக்குமென்று நினைக்கமுடியாது தெய்வசந்தர்ப்பத்தால் எதிர்பாராத நஷ்டம் ஏற்படும் பக்ஷத்தில் அதை நிவர்த்தி செய்துகொள்ள வேறுவழியின்றி வாழ்நாள் முழுவதும் கஷ்டங்களை அனுபவித்து கவலையடைய நேரிடுகிறது. இந்தரகசியத்தைக்கண்டு பிடித்துத்தான் மேல்நாட்டினர் தங்கள் ஜவேஜியின் ஒருபாகத்தை லிமிட்டெட் பாங்கிகளில் போட்டு பங்காளிகளாகச் சேருகிறார்கள். மீதப்பணத்தைக் கொண்டு சொந்தத்தொழில் நடத்துகிறார்கள். அந்தத் தொழிலில் நஷ்டம் ஏற்பட்டபோதிலும், லிமிடெட்பாங்கி கம்பெனிகளிலிருந்து தங்கள் பங்குக்கு லாபம் வந்துகொண்டிருப்பதால் அதிலிருந்து எக்காலமும் க்ஷேமமாகக் கவலையின்றி வாழ்ந்து வருகிறார்கள். இதை நமது நாடார்ஜனசமூகம் ஊன்றிக் கவனிக்கவேண்டும்.

பாங்கில் பணத்தைப் போட்டு பங்குகள் எடுப்பதால் என்னலாபம் கிடைத்துவிடப் போகிறதென்று சிலர் இன்னும் தவறுதலாக நினைப்பதாகத் தெரிகிறது. இந்த தப்பான எண்ணத்தை அடியிற்கூறும் திருஷ்டாந்தங்களைக் கண்டேனும் அடியோடு விட்டொழிப்பார்களென்று பூரணமாக நம்புகிறோம். துட்டுக்கு எட்டுச் சட்டி வாங்கி, சட்டி ஒன்றுக்கு எட்டுத் துட்டுக்கு விற்றாலும் வட்டித் தொழிலுக்குக்கட்டாது என்றபடி இராப்பகலின்றி வருமானம் சம்பாதிக்கும் தொழில் இது ஒன்றே. ஆதியில் நமது பாங்கைப்போல்20-லக்ஷ ரூபாய் மூலதனத்துடன் சென்னையில் ஸ்தாபிக்கப்பெற்ற இந்தியன் பாங்கிக்கு 1921வூ டிசம்பர் 31உ யோடு முடிவான ஒருவருஷத்துக்கு மொத்த வருமானம் ரூபாய் 615439-1-11 கிடைத்திருக்கிறது. "ஆரம்பத்தில் 500 ரூபாய் கொடுத்துவாங்கிய இம்பீரியல் பாங்கி பங்கு ஒன்றுக்கு இப்பொழுது 1345ரூ யாக இருக்கிறது. பாங்கில் பணம் போடுவதால் தங்கள் பங்குகளுக்கும் விசேஷ விலைமதிப்பு ஏற்படுகிறதுடன் வருஷந்தோறும் நல்லவருமானமும் வந்து கொண்டே இருக்கிறது. இதுவரை நடந்து வந்த நமது பாங் வரவுசெலவில் 100க்கு சுமார் 2-வீதம் வட்டிலாபம் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

இன்னும் பங்குகள் சேரச் சேர லாபமும் விசேஷமாகக் கிடைக்கு மென்பதில் சந்தேகமில்லை. நமது தொழில்களும் அபிவிருத்தியடைவதற்கு ஆதாரவாக இருக்கும்.

வாடாத செல்வம் படைத்த நாடார் குல தனவான்களே! இன்னும் பராமுகமாய் இராதீர்கள். இன்றே அவரவர் சக்திக்குத் தக்கபடி நமது நாடார் பாங்கில் முதலான பங்குகள் எடுத்து நீங்களும் உங்கள் சந்ததிகளும் எக்காலமும்க்ஷேமமாக வாழ்வதற்கு முயற்சி செய்யும்படி பிரார்த்திக்கின்றோம்.

காரியதரிசிகள்.

## திருமலாபுரம்.

போடிநாயக்கனூர் டவுன் திருமலாபுரம் நாடார் குலத்திலுதித்த மாரியம்மாள் என்ற மாதின் முன்னோர்களால் ஆக்கப்பெற்ற, தேனி ரோட்டிற்கு பக்கத்திலிருக்கும் ஸ்ரீமத் காளியம்மன் கோவில் தேவஸ்தானத்திற்கு சென்ற பல வருஷங்களாக ஷை அம்மாள் முன்னோர்களால் செய்துவரப்பட்ட பூஜை வகையறாக்களை செவ்வனே நடத்தி வருகிறார். பத்திரகாளியம்மாளின் கிருபா கடாக்ஷத்தினால் நாடார்களுக்கும், மற்றுமேனைய ஜாதியினர்களுக்கும் சந்தான விர்த்தியும் சம்பத்து மேன்மையும் உண்டாகியிருக்கிறது. ஷை அம்மன் சுமார் 20 வருஷங்களுக்கு முன் ஷை தேவஸ்தானத்திற்குப் பின்னால் ஷை அம்மாளின் அபிஷேகத்திற்காக ஒரு கிணர் வெட்டி கட்டினார். அக்கிணற்று நீர் ஆற்று நீருக்கும் தித்திப்புடைத்தாயிருந்தது. ஆனது பற்றி, திருமலாபுரம், ஐக்கமனாயக்கன்பட்டி, இருஊர் ஜனங்களும் குடிப்பதற்காக ஷை கிணற்றுத்தண்ணீரை எடுத்து வருகிறார்கள். பின் ஷை அம்மாள் தன் ஜவேஜின்பேரிலும், தர்மார்த்தமான வரும்படியின் பேரிலும் ஷை கிணற்றை விரிவாகக்கட்டினார் இவ்வாறிருக்க கௌன்ஸிலர் ஸ்ரீமான் சி. கி. பெருமாள் செட்டியாரவர்கள், தான் ஷை கிணற்றை வெட்டி கட்டியிருப்பதாகவும், அதை முனிஸிபாலிட்டிக்கு சேர்த்துக் கொள்ளும்படி யாகவும் 29-9-22 தேதியில் சேர்மென் ஸ்ரீமான் அ. சு. அழகணன் செட்டியாரவர்களுக்கு அனுப்பிய மனுவின் பேரில் ஷை விஷயத்தை 7-10-22 தேதியில் மேலேகண்ட விபரங்கள் சொல்லி, தனக்கு பாத்தியமான தென்றும், ஸ்ரீமான் செட்டியாரவர்களுக்கு யாதொரு பாத்தியமுமில்லையென்றும் ஷை கிணற்றை முனிசிபாலிட்டிக்கு சேர்க்கக் கூடாதென்றும் ஷை அம்மாள் மனுக் கொடுத்தார்.

இது விஷயமாய் பல மீட்டிங்குகளிலும் ஷை அம்மாளுக்கு சாதகமாயே விஷயங்கள் நடந்து கொண்டு வந்திருக்கின்றது. ஒரு மீட்டிங்கில் முனிசிபல் கௌன்ஸிலர் ஸ்ரீமான் அ. செந்திவிநாயக நாடாரவர்களும் இது விஷயமாய்ப் பேசும்போது, "கிணறு தனது சொந்தமென்று ஒரு ஆக்ஷேபனை யிருக்கும்போது முனிசிபாலுக்கு எப்படி சேர்த்துக் கொள்வதென்றும், இது விஷயமாய் நியாயத்தை தெரிந்தே செய்யவேண்டுமென்று" வாதித்ததோடு, ஷை நாவாக்கிணறு அந்த அம்மாளுக்குத்தான் சொந்தமென்று தனக்குத் தெரிந்த சமாச்சாரத்தையும் ரிக்கார்டு ஆதாரத்தோடு எடுத்துச் சொன்னார். மற்றொரு மீட்டிங்கில் ஷை அம்மாளுக்கு சொந்தமென்பதற்கு ஆதாரவுகளின் நகல்களை ஆஜர் படுத்தப்பட்டது. சேர்மன் அவர்கள் அசல் காப்பிவேண்டுமென கேட்டதற்கும் ஷை அம்மாள் அசல் காப்பிகளை ஆஜர் செய்ய முடியாததற்குச் சரியான காரணம் சொல்லியிருக்கிறார். ஒருவருக்கு சொந்தமான சொத்தை மற்றொருவர் தானமிட என்ன பாத்தியதை யிருக்கிறதோ தெரியவில்லை என்று ஸ்ரீமான் S. சாமிக்காளை நாடார் எழுதுகிறார்.

## பிரதம பிரிட்டிஷ் மந்திரிகள்.
### 1721—1922 வரை.

முதல் முதல் பிரிட்டிஷ் பிரதமமந்திரி பதவியை பெற்றுப் பார்த்தவர், ஸர் ராபர்ட் வால் போல் என்பவர். மொத்தம் 36 மந்திரிகள் பிரிட்டனில் மேற்கூறிய இருநூறு வருடங்களில் வேலை பார்த்துள்ளார்கள். இவர்களில் ஒருவர் நான்கு தடவையும், இருவர் மூன்று தடவையும், ஒன்பதுபேர் இரண்டு தடவையும், மந்திரிவேலை பார்த்துள்ளார்கள். ஆகவே 52 தடவையாக இம்மந்திரிகளால் நிர்வாகம் நடைபெற்றுள்ளது. ஒரு மந்திரி யாட்சிக்காலம் சராசரம் 5½ வருஷமாகக் கொண்டால், ஒரு நிர்வாகக் காலம் நான்கு வருஷமாகக் கருதப்படும்.

இந்த 36 மந்திரிகளில் 27 பேர் இங்கிலீஷ்காரர், 5 பேர் ஸ்காட்ஜாதி, 1 பேர் வேல்ஸ்காரர், மேலும் 21 பேர்லிக் அல்லது லிபரல் கட்சியைச் சார்ந்தவர்கள், 14 பேர் கன்சர் வேடிவ் அல்லது டோரிக் கட்சியைச் சார்ந்தவர்கள், ஒருமந்திரி இரண்டு கட்சிப் பிரதிநிதியம் சத்திலும் வேலை பார்த்துளார். பிரதம மந்திரிகளின் விவரம் பின்வருமாறு.

1. சர் ராபர்ட் வால்போல்
2. எர்ல் ஆப் வெல்மிங்டன்
3. ஹென்றி பெல்காம்
4. டியூக் ஆப் நியூகாஸில்
5. டியூக் ஆப் டிவோன்ஷயர்
6. எர்ல் ஆப் பூட்
7. ஜார்ஜ் கிரன்வைல்
8. மார்க்குவஸ் ஆ- ராக்கிங்காம்
9. எர்ல் ஆப் சாதம்
10. டியூக் ஆப் கிராப்டன்
11. லார்டு நார்த்
12. எர்ல் ஆப் போர்ட்லாண்டு
13. டியூக் ஆப் போர்ட்லாண்டு
14. வில்லியம் பிட்
15. ஹென்றி ஆடிங்டன்
16. லார்டு கிரன்வைல்
17. ஸ்பென்சர் பெர்சிவல்
18. எர்ல் ஆப் லிவர்பூல்
19. ஜார்ஜ் கானிங்
20. வைக்கௌண்டு கொடரிச்
21. டியூக் ஆப் வெல்லிங்டன்
22. எர்ல் கிரே
23. வைக்கௌண்டு மெல் போர்ன்
24. சர் ராபர்ட் பீல்
25. லார்டு ஜோகன் ரசல்
26. எர்ல் ஆப் டெர்பி
27. எர்ல் ஆப் அபெர்டீன்
28. வைக்கௌண்டு பால்மெர்ஸ்டன்
29. பெஞ்சமின் டிஸ்ரெயிலி
30. வில்லியம் கிரைட்ஸ்டன்
31. மார்க்குவஸ் ஆப் சாலிஸ்பரி
32. எர்ல் ஆப் ரோஸ்பெரி
33. ஆர்தர் பால்வர்
34. லர்.எச்.கேம்ப்பெல் பானர்மேன்
35. ஹென்றி. ஆஸ்குவித்
36. டேவிட் லாயிட் ஜார்ஜ்

இப்போது பிரதம மந்திரியாக வேலை பார்த்து வருபவர் போனர் லா.

### மந்திரிகளின் சம்பளவிடரம்

மந்திரிகளின் சம்பள விபரங்கள் அடியிற்கண்டவாறு:-

| | | பவுன். |
|---|---|---|
| 1. | பிரதம மந்திரி | 5000 |
| 2. | கவுன்ஸில் பிரசிடெண்டு | 2000 |
| 3. | தனாதிகாரி | 5000 |
| 4. | லார்டு பிரிவீஸில் | 5000 |
| 5, | சான்ஸெலர் | 1000 |
| 6. | உள்நாட்டு மந்திரி | 5000 |
| 7. | அயல் நாட்டு மந்திரி | 5000 |
| 8. | குடியேற்ற நாட்டு, மந்திரி | 5000 |
| 9. | யுத்த மந்திரி | 5000 |
| 10. | இந்தியா மந்திரி | 5000 |
| 11. | கப்பற் படை லார்டு | 5000 |
| 12, | சுகாதார மந்திரி | 5000 |
| 13. | வியாபார மந்திரி | 5000 |
| 14. | தொழில் மந்திரி | 2000 |
| 15. | விவசாய மந்திரி | 2000 |
| 16. | கல்வி மந்திரி | 2000 |
| 17. | ஸ்காட்லாண்டு மந்திரி | 2000 |
| 18. | அட்டார்னி ஜெனரல் | 7000 |
| | | மும்படிச் செலவும் |
| 19. | லார்டு அட்வொகேட் | 5000 |

பா. கே.

## செய்தித் திரட்டு

### இலங்கை சிவில் ஸர்விஸ்.
#### இந்தியர்களுக்கு அநுமதியில்லை.

இந்தியர்கள் இலங்கை ஸிவில் ஸர்விஸ் பரீக்ஷைக்கு ஆஜராகக் கூடாதென்னும் ஸிவில் ஸர்வீஸைப்பற்றிய புதிய விதியிலிருந்து ஏற்படுகிறது. ஆனால் இலங்கை வாசிகள் மாத்திரம் இந்திய ஸிவில் ஸர்விஸுக்கும் போவதினின்றும் தடுக்கப்படவில்லை யென்று தெரியவருகிறது.

### ஏழை ஜனங்களுக்கு வீடுகள்.

பம்பாய் நகர் அபிவிருத்தி சபையார் 50 ஆயிரம் ஒற்றையறை வீடுகள் கட்டி, ஏழை ஜனங்களுக்கு ஆதரவு புரிவதற்காகப் போட்டிருக்கும் திட்டப்படி திருப்திகரமாக ஏற்பாடுகள் நடந்துவருகின்றன. அடுத்த டிசம்பர் மாதத்திலேயே குடிபுகுவதற்கு அநுகூலமாக அறைகள் கட்டப்பட்டுப் போகும். 29-ம் தேதி பம்பாய் கவர்னர் யேற்படி வீட்டுத் திட்டத்தை ஆரம்பித்து வைக்கும் சடங்கை நடத்துவார்.

### பெட்டியிற்கண்ட பிணங்கள்.

கல்கத்தாவில்பணக்காரியும்,விதவையுமான ஒரு வங்காள ஸ்திரீ மற்றொரு வங்காள ஆடவனோடு சோர நடத்தை செய்து வந்தாள். இவர்கள் இருவரும் பூஜா விடுமுறை நாட்களில் கல்கத்தா ஹாரிஸன் சாலையிலுள்ள ஓர் வீட்டிற்குப் போனார்கள். அந்த வீட்டில் சால்வதமாயிருக்கப் பட்டவர்கள் வெளியிற் போயிருந்தார்கள். அதன் பிறகு தர்வான் உத்தரவு பெற்றுக்கொண்டு மேற் சொன்ன வங்காளமாதும் வங்காளியும் சில நாள் அவ்வீட்டில் தங்கினார்கள். ஒரு நாள் இரவு அவர்கள் படுக்கைக்குச் சென்றார்கள். அவர்களைப் பற்றி பின்னர் ஒன்றும் தெரியவில்லை. கடைசியாக மறு நாள் பிற்பகல் ஒரு பெட்டியில் இருந்து அவர்களின் பிரேதங்கள் எடுக்கப்பட்டன. முதல் நாள் அவர்கள் கொல்லப்பட்டிருக்கவேண்டு மென்பது புலப்படுகின்றது. சந்தேகத்தின் பேரில் இருவர் அரஸ்டு செய்யப்பட்டிருக்கின்றார்கள். ஜூர்காத் கடைத்தில் இவ்விஷயம் நடந்தது போலீஸார் செய்த விசாரணையில் பெருங்குறித்த வங்காள ஸ்திரீ அணிந்திருந்த விலையேறப்பெற்ற நகைகளை அபகரிப்பதற்காக அவள் ஆசை நாயக(சோர)னையும் கொலை செய்திருக்கிறார்களென்று தெரியவருகிறது.

### கைகண்ட பலன

பல கண்காட்சிகளில் பிரக்யாதிபெற்ற

"வீரிய
தாதுவிர்த்தி ஆனந்த
லேகியம்."

ஒரு மஹான் அவர்களால் நமக்கு கிடைத்த பூர்ணமி சாஸ்திர முறைப்படி தயாரிக்கப்பட்டதேவாமிர்தம்போன்றது.

தேக உஷ்ண அங்கையிருல் நீத்துப் போகும் பலஹீனம், ஓர்வித சக்திக்குறைவு மனோவாழ்க்கையில் பிரியமில்லாமல், சோர்ந்து போகும் குணங்கள், சரீரத்தில் பல பாகங்களில் துடித்திரியும் பற்பல வாய்வு ரோகங்கள், தீவிரமான வெட்டைகள், லகுகாலசதி, இடுப்புவலி, கெஞ்சுவலி, பசி, மந்தம், மலச்சிக்கல், இவைகளுக்கெல்லாம் முதல்தரமான மருந்தென்று தங்களின் சிநேகிதர் யாவும் புகழ்ந்தும் பேசுவீர்கள். எமது லேகியத்தை, வாலிபர் முதல் வயோதிகர் வரை யாவரும் உபயோகப்படுத்தலாம். பத்தியமில்லை. உபயோக விபரம் மருந்துடன் அனுப்பப்படும்.

| | | |
|---|---|---|
| 40-நாள் 12-பலம் | டின் 1-க்கு விலை, | ரூ 6—0—0 |
| 20-நாள் 6-பலம் | டின் 1-க்கு விலை, | ரூ 3—0—0 |
| 10-நாள் 4-பலம் | டின் 1-க்கு விலை, | ரூ 2—4—0 |

(வி. பி. சார்ஸ்,பிரத்தியேகம்)

விலாசம்:— மானேஜர்.

ஹா. J செய்கப்துல்காதிர்,
நிஜாம் வைத்தியசாலை,
கூடலூர்-Q-T.
(நீலகிரி ஜில்லா)

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

## நமது கண் பார்வை.

(திராவிடனில் தபாலந்தன் பின்வருமாறு எழுதுகிறார்.)

திருப்பூரில் தமிழ்நாடு காங்கரஸ் ஒன்று இந்த மாதம் 3, 4-ம் தேதிகளில் மிஸ்டர் வாசுதேவய்யர் அவர்களின் அக்கிராசனத்தின் கீழ் நடை பெற்றதாகச் சில பத்திரிகைகளில் பார்த்தேன். அவைகளில் சில விசித்திரமான விவாதங்களையெல்லாம் பார்க்க நேர்ந்தது. இவர்களுடைய முக்கிய தீர்மானங்கள் ஒத்துழையாமை இயக்கத்தை ஒட்டி சட்டசபைக்குப் போவதா, போகாமல் நிற்பதா என்கிற விவாதங்களும் 'சர்க்காருக்கு வரிச் செலுத்தும் குடிமக்களை வரி செலுத்த வேண்டாம் என்று சொல்வதா, செலுத்தும்படி சொல்வதா' யென்ற விவாதங்களோடும் தீர்மானங்களோடும் இருந்தது. இவைகளில் தீண்டாமை யென்னும் விஷயத்தை மாத்திரம் பிராமணர்களும் இரண்டொரு பிராமண ரல்லாதாரும் சமணதோடு காகிதத்தின் மூலமாகவும் வாய் அளவிலும் நிறைவேற்றி விட்டார்கள். தீண்டாமை விஷயத்தில் மாத்திரம் எந்த பிராமணரும் தடங்கல் செய்ததாகப் பத்திரிகைகளில் காணவே யில்லை. ஆனால் ஸ்ரீமான் டி. வி. கலியாணசுந்தர முதலியாரவர்கள் பாண்டிய நாட்டிலிருக்கும் நமது இந்து சகோதரர்களாகிய நாடார்களென்று சொல்லப்படும் வகுப்பாரை இந்து தேவாலயங்களில் மற்ற இந்துக்களோடு போய் தீர்த்த பிரஸாதம் வாங்கிக் கொள்வதற்குச் சுதந்திரம் இருக்க வேண்டு மென்றும், அப்படி கோவிலுக்குள் அவர்களைப் போகக்கூடாதென்று தடுக்கும் தர்ம சாஸ்திரங்கள் ஏதாவதிருந்தால் அவைகளைத் திருத்தி கோவிலுக்குள் தாராளமாய்ப் போக ஏற்பாடு செய்ய வேண்டு மென்ற தீர்மானத்தை மிஸ்டர் முதலியார் கொணர்ந்தவுடன், அச்சபையில் நிறைந்திருந்த எல்லாப் பார்ப்பனர்களும் அதை ஆதரிக்காமல் எதிர்த்துப் பேசியதைப் பார்த்தால் மகாவிசித்திரமாக இருந்தது. தீண்டாமையை ஒருமனதோடு தீர்மானித்த பார்ப்பனர்களுக்கு நமது நாடார்கள் கோவிலுக்குள் செல்வதில் மனமில்லாமல் போனதற்குக் காரணம் அறிவது, நலமென்று நினைக்கிறேன். ஆனால் காங்கரஸில் காந்தி அடியார்கள் கொஞ்ச காலமாகத் தீண்டாமை இருப்பது தேசத்திற்குக் கெடுதலென்று உபன்னியாச மேடைகளின் மேல் ஏறி ஏறி உபன்யாசிப்பதும் பத்திரிகைகளில் எழுதிக் கொண்டிருப்பதும் மகா பலமாகத்தானிருந்தது. அதை இதுவரையில் காரிய ரூபமாக காட்டுவதோ, அல்லது கள்ளுக்கடை வைக்கும் காலங்களில் மறியல் செய்வதற்கு நீட்டம் போட்டு இடுப்பு கட்டி வேலைசெய்வது போலவும், சட்டசபைக்குப் போகிறவர்களுக்கு ஓட்டு கொடுக்காதீர்கள் என்று மறியல் வேலை செய்ததுபோல் இந்த தீண்டாமையை ஒழிக்க ஒருவிதமாகிய நீட்டமான வேலை செய்வதற்கு முன்வராமல் இருப்பதுபோலவும், வக்கீல்கள் கோர்ட்டுக்கு போகிறதையும் தடுக்க முயலாது இருப்பது போலவும் இக்காரியத்தில் இருந்துவிட்டால், காரியரூபமாய் நடந்த பின் என்னசெய்வது என்ற ஆத்திரத்துடன் பார்ப்பனர்கள் கோவில் தீர்மானத்தை எதிர்க்க முன் வந்தார்போலிருக்கிறது. தீண்டாமை யென்னும் விஷயத்தில் வாயில்லா பூச்சிகளாகிய ஆதிதிராவிட சகோதரர்போல், நாடார்குல க்ஷத்திரிய மக்கள் சும்மா இருக்கப் பட்டவர்களல்ல, தீர்மான மானவுடனே நம்மைக் கேட்பார்கள். கோயில்களில் பிரவேசிப்பார்கள் என்ற பயத்தாலேயோ அல்லது கோவிலிலிருக்கும் ஸ்வாமிக்கும் நமக்கும் தீட்டொட்டிக்கொண்டால் என்ன செய்வது என்ற எண்ணத்தாலோ கோவில் தீர்மானத்தை மாத்திரம் தடுக்க சுயராஜ்யம் வேண்டுமென்று கேட்கும் பார்ப்பனர்கள் முன் வந்தார்போலும். கோவில் தீர்மானத்திற்கு பல பார்ப்பனர்கள் பேசின போதிலும் பார்ப்பனரல்லாதவர்கள் எல்லாம் ஆதரித்தாரென்றே தெரியவருகிறது. கோவில் தீர்மானத்தைக் கடைசியாக ஒருவிதமாய் மெழுகிவிட்டார்கள் என்றே தெரியவருகிறது. மற்ற பார்ப்பனரெல்லாம் ஒரு விதமாய் மெழுகி விட்டாலும் கூட தற்போதே சுயராஜ்ஜியத்தை என் கையில் ஒப்புவித்து வெள்ளைக்கார ரெல்லாம் கப்பலேறி உங்கள் நாட்டுக்கு போங்கள்' என்று சொல்லும் வைத்தியர் பி. வரதராஜுலு நாயுடுகாரு மாத்திரம் வெகு விந்தையாக தீர்மானத்தைக் கொண்டுவந்து பேசியதைப் பார்த்தால் இவருடைய தேசாபிமானம் வெளியாகும். வைத்தியருடைய தீர்மான மென்ன வென்றுவோ, நாடார் என்ற இந்து மக்களை கோவிலுக்குள் பிரவேசிக்கச்செய்வதற்கு மத குருக்களாயிருக்கும் ஸ்ரீசங்கராசாரியார் முதலானவர்களைக்கேட்டு அதன்மேல் அவ்விஷயத்தை பார்த்துக் கொள்ளலாமென்று தீர்மானத்தை முடிவுசெய்து விட்டார். ஸ்ரீ சங்கராச்சாரி சொன்னால் கோவிலுக்குள்விட்டுவிடலாம். இல்லாவிட்டால் இல்லையென்ற அர்த்தத்தோடு முடிவு பெற்றது போலிருக்கிறது. மனித வர்க்கத்திற்கெல்லாம் சுதந்திரம் வேண்டும். சுயராஜ்யம் வேண்டும். எல்லாரும் சமமாயிருக்கவேண்டும் என்று பறைபடிக்கும் வைத்தியர் தந்திரமாகப் பார்ப்பனரை யொட்டி பேசியதைப் பார்த்தால் தம்முடைய சுயகாரியத்திற்குத் தடங்கல் வந்து விட்டால் என்ன செய்வது என்ற எண்ணத்தோடே பேசியவர்போலிருக்கின்றது. கோவில்கள் யார் கட்டினது? தமிழ் மக்களுடைய பணம் போட்டு கட்டியதுதானே. நம்மவர்கள் சேர்ந்து கற்கள், மண் சுண்ணாம்பு முதலான சகல கஷ்டங்களும் பட்டு கட்டிவைத்த கோவில்களில் நம்மவர்களை உள் பிரவேசிக்கச் செய்வதற்கும் பார்ப்பன ஸ்மார்த்தர்களுக்கு மாத்திரம் குருவாயிருக்கும் ஸ்ரீசங்கராச்சாரியாரை போய்க் கேட்கவேண்டிய காரணமென்ன இருக்கின்றதோ தெரியவில்லை. நாளைக்கு ஒருகால் சுயராஜ்ஜியம் வந்தாலும் இந்த வைத்தியர் பார்ப்பனரையும் பார்ப்பன குருக்களையும் கேட்டுத் தானே மற்றவர்களுக்குச் சுதந்திரம் கொடுப்பார் போலிருக்கிறது! நாம்கட்டிய கோவிலுக்கு நம்மவர்களை போகச்செய்வதற்கு சுதந்திரமில்லாத வைத்தியர் சுயராஜ்யம் கேட்க அருகர் தானென்று திராவிடமக்கள் யோசிக்க வேண்டும். வைத்தியர் வரதராஜுலு நாயுடு பகல் வேஷத்தை கண்டு ஏமாறுதீர்கள் என்று கேட்டுக்கொள்ளுகின்றேன்,

## குதிரைமொழித்தேரி.

(கெ. கலியாணசுந்தர நாடார் கொழும்பு)

திருச்செந்தூர் தாலுகாவைச் சார்ந்த காயாமொழி, கானம், நாலுமாவடி, கச்சினாவிளை, செம்மரிக்குளம் முதலிய பல கிராம வாசிகளான நாடார்களுக்குப் பல வருடங்களாக பெருத்த இடையூறாக இருக்கிற "குதிரை மொழித்தேரி" என்ற விஸ்தாரமான மணற் பூமியை பொது ஜன உபயோகத்திற்கு எவ்விதமான வழியில் உபயோகப்படச் செய்யலாம் என்ற விடாத்தைப் பரிசீலனை செய்யும் பொருட்டு, மெட்ரூஸ் கவர்ன்மெண்ட் ஸ்தலஸ்தாபன இலாகா செக்றட்டெரி ஸ்ரீமான் எட்வின் பெரியநாயக நாடார் B. A. B. L: M. L C. அவர்களும் கனம்டிஸ்ற்றிக்ட்பாரஸ்ட்ஆபீஸர் துரையவர்களும் சில மாதங்களுக்கு முன் விஜயம் செய்து, டை தேரியைச் சுற்றிலு முள்ள பல ஊர்களிலும் முகாம் போட்டு தேரியையும் சிரமம் பாராட்டாமல் சுற்றிப்பார்த்து பொதுஜனங்களின் கஷ்டங்களை கவனமாய்க் கண்டறிந்து, பிரஜைகளுக்கு உபகாரமும், ஸர்க்காருக்கு வருமானமுங்கிடைக்கக்கூடியமுறையில்போதிய நன்மை புரியச் சிபார்ஸ் செய்வதாய் வாக்களித்துச் சென்ற விஷயம் யாவரும் கண்டறிந்ததே. பிரஸ்தாப விஷயமாய் இதுகாறும் எவ்விதமான நடவடிக்கைகளும் ஊக்கமாய் நடந்து கொண்டிருப்பதாய் தெரியவில்லை. டை பரிசீலனை நடைபெற்ற காலத்தில் மிகுந்த உற்சாகத்துடன் முன்னணியில் நின்று ஊக்கங்காட்டிய பெரியோர்கள் பின்னடி மௌனயாயிருப்பதேனோ? அழுதபிள்ளை பால்குடிக்கும் தட்டினால் திறக்கப்படும். கேள் கொடுக்கப்படும். முயற்சியுடையார் இகழ்ச்சியடையார் என்று சொல்லப் படுகிற பல நீதிமொழிகளின்படி இக்காரியத்தில் இடைவிடா முயற்சியுடன் ஞாபகப் படுத்திக் கொண்டிருந்தால் மட்டுமேயன்றி அனுகூலங்கிடைப்பது கஷ்டம். நமக்கு நன்மை செய்வதில் காருண்ய கவர்ன்மெண்டாரும் விஜயம் செய்த பெருபகாரிகளும் நாடாரவர்களும் விசேஷ கவனம் செலுத்துவார்களாயினும் நாம் ஞாபகப்படுத்தினாலொழிய நம் விஷயம் பைசலாக நெடுநாட் செல்லக்கூடும். ஆதலால் டை பகுதியிலுள்ள 'ஊர்ப் பிரதிநிதிகள்' ஓர் மீட்டிங்கு கூடி ஆலோசித்து சென்னைக்குப் பிரதிநிதிகளை யனுப்பியாவது வேறு விதமாயாவது ஞாபகப்படுத்திவேண்டும் பிரயத்தனங்களைச் செய்து காரியசித்தியடையுமாறு நினைப்பூட்டுகின்றேன். பொது ஜனோபகாரமான காரியங்கள் கைகூடிவருகையில் பலரும் பலவிதமாய் அபிப்பிராயத்தில் வேறுபட்டு குறிப்பிட்டஓர்விஷயத்திற்கு பலஹீனம் உண்டு பண்ணுவதைவிட, விஷயாரம்பத்திலேயே யாவரும் ஒருங்குகூடி ஆலோசித்து பூர்வபீடிகையான தகுந்த ஏற்பாடுகளைச் செய்து அனுகூலம் பெற முயற்சிப்பதே சாலச்சிறந்தது. ஒவ்வொரு கிராமத்தாரும் தனித் தனி வெவ்வேறுவித நோக்கத்துடன் மனுச் செய்வதைவிட டை தேரியைச் சுற்றிலுமிருக்கிற கிராமவாசிகளனைவரும் ஒரே நோக்கமாய் வேலை செய்தால் இத்தகைய விஷயங்களில் விசேஷபலன் கிடைக்கும். சென்னை சட்டசபையில் பாரெஸ்ட் விஷயமான பிரச்னைகள் அடிக்கடி விவாதத்திற்கு வந்து பல ஜில்லாக்களுக்கு நன்மை கிடைத்திருக்கிற இச்சமயம் தப்பினால் மறுசமயம் வாய்ப்பதரிது.

## கிராமங்கள்.

கடலாற் சூழப்பட்ட பெரிய பூபாகத்திக்கு கண்டமென்றும் அதன் பிரிவுகளுக்குதேசங்களென்றும் அவைகளின் ஒவ்வொரு பாகமாய்ராஜ காரியங்கள் பார்க்கப்பட்ட இடங்களுக்கு மாகாணம் அல்லது தலை நகரென்றும், அந்நகரின் உட்பிரிவுகளாய் பெரிதுஞ் சிறுதுமான ஊர்களுக்கு கிராமம், குக்கிராமம், சேரியென்பனவாதிய பேர்களாரும் இவைகளில் நான் எடுத்துக்கொள்வது கிராமமென்பதுவேயாம்.

அரசாங்கம் சகல விர்த்திக்கும் முன்னேற்ற ,மடைவதற்குரிய அடிப்படை கிராமங்களேயாம். கிராமங்களென்னும் பல்லாயிரம் கரம்புகளுறுதியால் அரச அங்கம் நிலைத்து நிமிர்ந்து நின்றது. இது பொது. இனி நாம்நமது காரியங்களை கவனிப்போம். நாம்மேற் சொல்லியபடித்தான் இடங்களிலெல்லாம் வசித்துவருகின்றோம்.

நடையில் நின்றுயர் நல்லவர்போனபின்
இடையிலே வருமன்னரா லெய்த்து ஈண்
டடையுமா விருடோரி யாசியின்
குடையினாலே குளிர்ந்தஞாலமே.

அதாவது நீதிவழியால் நின்ற அரசாட்சி நீக்கி இடையில்வந்த அரசர்களின் கொடுங்கோல் வெப்பத்திரல் காய்ந்து விக்டோரி மஹாராணியார் பரப்பிய குடை நிழலாற் குளிர்ச்சி யடைந்தது.. இப்படியான் இத்தேசத்தில் இத்தென்னாட்டில் பலவரசர்களரசியலான பல வாரணியங்களிற்றிரிந்து நிலைபற்றுமல் ஆங்கில வரசியல் வந்ததின் பின் நிலை பெற்று இளைப்பாறி சுமார் ஓர் நூற்றாண்டு கடந்ததின்பின் அரசியல் போன்ற சங்கமென்ற ஓர் ஆலோசனை சபையை அமைத்துக் கொண்டோம். சுமார் 10-வருடகாலமாய் நாடார் சமூக நோக்க மனைத்தும் அதனை போற்றிக்கொண்டிருக்கின்றன. பிரசாரகர்களும் பத்திரிகாசிரியர்களும் தலைவர்களும் பெரு வேலை செய்து கொண்டிருக்கின்றனர், அவ்வித சங்க காரண தாரியகர்த்தர்கள் கவனிப்பது கிராமங்களையேயாகும். குடிகள் செலுத்தும் நிலத்தீர்வைகளை அவைகளுக்குரிய கிராமாதிபதிகள் (ஜமீன்தாரப்பார்கள்)பெற்றுக்கொள்கின்றனர். அவர்கள் அக்கிராமத்தார் முன்னேற்றத்தைக் கருதுவதில்லை. நாமும் நமது சங்கக்காணிக்கையாய்த் தலைக்கட்டு வீதம் 1-ரூ பெறுகிறோம். நம்மின முன்னேற்றத்தைக் கருதி கிராம நிலையைக் கவனிக்குமாறு பிரசாரகர்களுக்கு சங்கத்தலைவர்கள் சில கட்டளைகளுங் கொடுத்திருக்கின்றனர். கிராமங்களிலிருக்க வேண்டியது முக்கியம் ஒற்றுமை. நாம் பார்த்த மட்டிலும் ஒற்றுமைக்கிராமம் மருந்தே. பெரிய கிராமங்கள்ளும் பட்டணங்களும் அப்படியே இது உலகத்தில் கால சுபாவம். இதெப்படியாயினும் மகமை, பேட்டை, கோவில், பாடசாலை ஒவ்வொரு ஊரிலும் இருந்து வரவேண்டும், பேட்டை பாடசாலைகளை நிர்வகிக்கத்திறனில்லாவிடினும் மகமை ஆலயங்களை இயல்புக்குத் தக்கபடி நிர்வகிக்கும் நிலையுடையதாகவே கிராமங்களிலிருந்து வரவேண்டும். மகமையின் சீர்மையைப் பற்றி, இப்பத்திரிகை 4-ம் ஆண்டு 1-ம் பிரசுரத்தில் தெளிவா யெடுத்துச் சொல்லியிருக்கிறேன். மேற் சொல்லிய பொது ஸ்தாபகச் சம்ரக்ஷணையுடன் நமக்கு ஆதி அமைப்பாய் அமைந்த உறவின்முறைப் பஞ்சாயத்துச் சபையே யுறுதியாயிருக்கவேண்டும். அது விரோதமென்னும் அனல் பற்றி வெந்தொழியு பொருள்களை வேகாதபடி நிறுத்தும் தண்ணீராம். கிராமங்களிலுள்ளார் போதிய கல்வி விவேக முள்ளவராகவேயிருந்து வரவேண்டும். பழகவேண்டும். இடத்துக்குத் தக்கபடி அந்நியரிடஞ் சிநேகமாயிருந்து வருவது சிறந்தது. சாமபேத தானதண்டமென்னும் சதுருபாயத்தில் முதலுபாயம் இதுவே. ஆகையால் கிராம வாசிகளாகிய நாடார்கள் இயல்பாச் செய்து வருகிற விபசாயம், வியாபாரமாகிய துறைகளால் அடையும் ஊதியல்பயனக மகமைநிதியேற்படுத்தி சங்க நோக்கத்துக்கிசைந்து நடந்து வருவார்களாக. பழசைவூரசி.

## நாடார் மஹாஜன சங்க பிரசாரம்.

மதுரை 'பாண்டிகுலதீபம்' பத்திராதிபர் ஸ்ரீமான் K. S. அருணகிரி நாடாரும் வக்கீல் ஸ்ரீமான் V. A. கந்தசுவாமி நாடார் B. A. B. L, சங்க குமஸ்தா K. வீரகுமார நாடார் அவர்களும் திருநெல்வேலி ஜில்லா நான்குநேரி தாலுகாவிலுள்ள கோரியூர், கலந்தபனை, கடம்பன்குளம், ரோஷண்மியாபுரம், வடலிவிளை முதலிய கிராமங்களுக்கு சென்று. ஆங்காங்கு நாடார்களுக்குள் மஹாநாடு கூட்டுவித்து கல்வி ஒழுக்கங்களுக்கேதுவான காரியங்களையும் நோக்கங்களையும் வெகு விஸ்தாரமாக யெடுத்துரைத்து, மேலே கூறியுள்ள ஒவ்வொரு கிராமத்திலும் நாடார் மஹாஜன சங்கத்திற்கு கிளைச்சங்கங்கள் தாபித்து அவற்றைச் சங்கத்தின் விதப்படி ரிஜிஸ்தர் செய்தும் நாடார் மஹாஜன சங்கத்திற்கு தலைக்கட்டுவரி முதலியன மொத்தம் ரூபாய் 190-0-0 வசூலித்தும் 22-11-22ல் மதுரைக்கு சென்றிருக்கிறார்கள். நமது ஜனங்களை அபிவிர்த்திக்கு கொண்டு வருவதற்கு கருணை கொண்டு இதுமுதல் மூன்று மாசம் வரை இவ்வட்டகை பிரசாரத்திற்கு சங்கம் பிரசாரகர்களில் நீண்ட அநுபோகஸ்தர் ஒருவரை அனுப்பினால் யேராளமான தலைக்கட்டுவரியும் அங்கத்தினர்களும் நன்கொடையும் சேர்க்கலாம் இதைக் கவனித்து அவ்விதம் செய்யவேணுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன். என்று ஸ்ரீமான் இராஜமணி நாடார் எழுதுகிறார்.

நமது மித்திரன்

## போஷகப் பிரபுக்கள்.

பாலக்காடு முனிசிபல் கௌன்ஸிலர் ஸ்ரீமான் க. கு. பொன்னப்ப நாடார்.

அருப்புக்கோட்டை முதலாளி ஸ்ரீமான் மு. மு. முத்துக் குமாரசாமி நாடார்.

சென்னை. நூல் வியாபாரம், காட்டாங்மை ஸ்ரீமான் கா. ஆறுமுக நாடார்.

சென்னை "விநோத விகடன்" பத்திராதிபர் ஸ்ரீமான் ஆ. ப. வை. கோதண்டராம பாண்டியநாடார்.

திருநெல்வேலி, முனிஸிபல் கௌன்ஸிலர் ஸ்ரீமான் அரி. அ. செண்பக நாடார்.

திருநெல்வேலி ஜில்லா மானூர் தன்டப்பத்து, மிருஸ்தார் ஸ்ரீமான் சோ. செல்லத்துரை நாடார்

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

அறிவுடை நண்பர்கட்கோர் அன்பான ஓர் விண்ணப்பம்.

இழந்துபோன பலத்தை திரேவேளை லேகியம் சாப்பிட 1-மணி நேரத்தில் கொடுக்கும், துரையே கவனியுங்கள்.

மெடல் பெற்ற

## ஊர்க்குருவி சத்தின் "லேகியம்"

இந்த லேகியபாகம் மற்றோர் செய்து கொடுத்தால் ரூபாய் 1000 இனாம். வெண்பா.

ஊர்க்குருவி சத்தெடுத்து உன்னதமாய் செய்த இந்தச்
சீர்கொண்ட லேகியத்தைத் தின்றவர்கள் பேர்கொண்ட
சிங்கம்போல்வீரஞ் சிறந்தாண்மை தத்துவராய்
மங்கையுடன் வாழ்வார் மகிழ்ந்து.

இந்த லேகியம் ஒவ்வொரு புருஷர்களும் பரீக்ஷித்து சந்தோஷமடைவீர்களாக. தத்தம் துர்செயலால் ஜீவதந்தினமாகிய இந்திரியத்திற்கு ஏற்பட்டிருக்கும் கெடுதிகளை நீக்குவதில் இதைவிட சிறந்த மருந்து கிடைப்பது அரிது. இந்திரியநஷ்டம் இந்திரிய நீப்பு சிகிரஸ்கலிதம் நித்திரை ஸ்கலிதம் ஆண்குறி சோர்வு எழுவகை தாதுக்களின் பலஹீனம் அஸ்தி வெட்டை சூடு நரம்பு தளர்ச்சி சதா இடுப்புவலி மலர்சிக்கல் பசி மந்தம் பித்தாதிக்க உஷ்ணவாய்வு கிருமி சோகம் தர்நீர் வியாதிகள் தேகத்தில் ஓடித்திரியும் பலவித வாயுரோகம் பாரிசு வாய்வு நெஞ்சுவலி விரைவாதம் கைகால் அசதி மயக்கம் மறதி முதலியன நிவர்த்தியாகும். சிங்கவீரிய ஆண்தத்துவத்தை யுண்டாக்கி இந்திரியத்தை மணிபோல்கட்டி போக இன்பத்தை கொடுக்கும் இந்த ஊர்க்குருவி சத்தின் லேகியம் குணமில்லை என்று சத்தியமாய்ச் சொன்னால் ரூபாய் 500 இனாம் கொடுக்கப்படும்.

40 நாள் 16 பலம் டப்பி 1-க்கு ரூபாய் 10—0—0 20 நாள் 8-பலம் டப்பி 1-க்கு ரூ 5—0—0 12-நாள் 5 பலம் டப்பி 1,க்கு ரூபாய் 3—0—0. வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

மருந்து உபயோகிக்கும் விபர நோட்டீஸ் மருந்துடன் அனுப்பப்படும்.

பினாங்கு, சிங்கப்பூர், கிள்ளான், குவாலாலம்பூர், பேரா முதலிய பிரதேச வாசகர்கள் மருந்தின் கிரயமும் தபால்சார்ஜ் ரூ 2-8.0 யும் சேர்த்து முன்பணம் அனுப்பி மருந்து பெறவேண்டும். மேற்படி ஊரார் வி. பி. யில் அனுப்பும்படி எழுதுங் கடிதங்களை அங்கீகரிக்கப்படமாட்டாது. தங்கள் விலாசம் தெளிவாய் எழுதவும். வியாபாரிகளுக்கு 100-க்கு ரூபா பத்து வீதம் கமிஷன் கொடுக்கப்படும்.

எமது விலாசம்:—

எம். ஏ. மரைக்காயன் அண்டு கம்பெனி,
ஆயுர்வேத வைத்தியசாலை,
பரங்கிப்பேட்டை, தென்னாற்காடு ஜில்லா.

எமது சிலோன் ஏஜண்டுகள்.

போ. சேல்லையா செட்டியார்,
கொபண்டரி வத்தை, நாவலாப்பிட்டியா போஸ்டு, சிலோன்.

## நாடார்களுக்கு ஓர் வசதி.



ஐயா! தூத்துக்குடி யென்ற திருமந்திர நகரில் சாப்பாடு, காப்பி தினப் முதலியவைகள் தக்கவசதி மிக்க இல்லையென பலரால் சொல்லகேள்விப்பட்டு சௌகரியத்தை நாடி விருதுபட்டியிலிருந்து முன் வந்த எங்கள் 'நவீன சுகபோஜன சாலையை' இந்நகர் மேலூர் ரயில்வே ஸ்டேஷனுக்கு எதிரே மகா-ள-ள-ஸ்ரீ கனம் F. S. பெரியசாமி அவர்கள் கட்டிடத்தில் ஸ்தாபனம் செய்திருப்பதால் சகல நாடார் கனவான்களும் உணவு அருந்தியெங்களை கௌரவப்படுத்தும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். இப்படிக்கு

புரோப்ரைட்டர்கள் விருதுபட்டி. { எஸ். எஸ். கருப்பையா நாடார். எஸ். ராமசாமி நாடார்

வெளியாகி விட்டது! வெளியாகி விட்டது!!

அனுபோக

## " கைத்தொழில் போதினி, "

என்னும் அருமையான கைத்தொழில் சாஸ்திரம் வெளியாகி விட்டது. இதிலடங்கிய அனேக இரகசிய முறைகளைக் கொண்டு, ஏழைகளெவரும் முன்பணம் அதிகச் செலவில்லாமலும், பிரயாசை இல்லாமலும், நிறையப்பணம் சம்பாதிக்கலாம் சுயேற்சியாய் சுகஜீவனம் செய்யவிரும்பும் ஒவ்வொருவருக்கும் தக்கசமயம் இதுவே என்பதை மறந்து விடாதீர்கள். காப்பி 1-க்கு விலை ரூபாய் 1. வி. பி. செலவு அணா 5. (முன்பணம் அனுப்புவோருக்கு தபால் சார்ஜ் இனாம்.

K. N. S. & Co.,
ARIMALAM.

## தேசோபகாரி.

தேசிய விஷயங்களையும், காங்கிரஸ் கிலாபத் கொள்கைகளையும், சுயராஜ்ய விசேஷத்தையும், இந்து முஸ்லீம் ஐக்கியத்தின் அவசியத்தையும் எடுத்துக்காட்டி, ஜனங்களின் குறைகளை நீக்கவும், பல துறைகளிலும் சீர்திருத்தும்படி செய்யவும் அதற்குவழிகளைக் காண்பிக்கவும், தேசசேவையே தனது நோக்கமென்று " தேசோபகாரி " யென நாமம்புனைந்து பர்மா தேசத்தின் தலை நகராகிய இரங்கோனில் அவதரித்து தற்காலம் வாரம் ஒரு முறை பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் வெளிவந்துலவுகிறது.

சந்தா விபரம்.

| | | |
|---|---|---|
| உள்நாடு, | உள்ளூர் வருஷ சந்தா ரூபா | 5—0—0 |
| | வெளியூர் வருஷ சந்தா ரூபா | 6—0—0 |
| வெளிநாடு | வருஷ சந்தா ரூபா | 7—0—0 |

மானேஜர், C. மாணிக்கம்,
" தேசோபகாரி " லிமிட்டெட்,
நெ 6, 52-வது வீதி இரங்கோன்.

## நாடார் பாங்கு
லிமிட்டெட் தூத்துக்குடி,

## மூலதனம் ரூ 20,00,000.

வாக்குறுதி செய்யப்பட்ட (SUBSCRIBED) மூலதனம்
(17-10-22 முடிய) ரூபா 376960
செலுத்தப்பட்ட மூலதனம்
(17-10-22-முடிய) ரூபா 174385

தூத்துக்குடியில் நடந்த ஆறுவது நாடார் கான்பரென்ஸின் தீர்மானத்தின்படி பாங்கு ஆரம்பித்து வேலை நடந்து வருகிறது. மூலதனம் ஜாஸ்தியிருக்கச்செய்தால் அதற்குத்தகுந்த லாபமிருக்கும் பங்கு எடுத்தவர்களுக்கும் அநுகூலமாயிருப்பதோடுகூட லாபத்தில் ஒருபாகம் நம் பொது நன்மைக்காக செலவிடப்படுமாதலால் நாடார்குலத்தைச் சேர்ந்த ஒவ்வொருவரும் தங்கள் சக்திக்கு ஏற்றவாறு கூடுதலான பங்குகள் எடுத்து இந்தப்பொதுக் காரியத்தை சித்திபெறச் செய்யவேண்டியது நம் கடமை. ஆகையால் காலதாமதம் பண்ணாமல் உடனே பாங்கில் பங்குகளுக்கு அப்பிளிக்கேஷன் அனுப்புங்கள் வரலாற்றுப் பத்திரிகையும் அப்பிளிக்கேஷன் பாரமும் கேட்பவர்களுக்கு உடனே அனுப்பிவிக்கப்படும்.

நீங்கள் ஒரு சந்தாதாரரா? இல்லையா? அப்படியாயின் சேருவதற்கு முந்துங்கள்.

## ஸ்ரீ ராம கிருஷ்ண விஜயம்.

பிரதிமாதமும் முதல் வாரத்திற்குள் தவறாமல் வெளிவரும் இப் பத்திரிகை பிறமத தூஷணை யின்றி, ஹிந்துமத விருத்தியையும், தேச சேவையையும் முக்ய நோக்கங்களாகக் கொண்டுள்ளது.

ஹிந்து மதத்திற்குப் புத்துயிர் அளித்த தவராஜ சிங்கமாகிய ஸ்ரீமத் ஸ்வாமி விவேகாநந்தர் நிறுவிய ஸ்ரீ ராம கிருஷ்ண மடத்தாரால் நடத்தப்படுவது.

தமிழ், ஆங்கிலம் இவற்றில் வல்லுநராலும் உலகானுபவம் மிக்க பெரியோர்களாலும் எழுதப்படும் விஷயங்களைக் கொண்டது.

உள்நாடு வருஷச் சந்தா ரூ 3-0-0 வெளிநாடு வருஷச் சந்தா ரூ 4-0-0

மானேஜர், ஸ்ரீ ராம கிருஷ்ண விஜயம்,
மயிலாப்பூர், சென்னை.

FOUNDER OF THE ROLL BISCUITS FIRST AT MADURA.

## Best Indian Biscuits Factory.

## பெஸ்டு இந்தியன் பிஸ்கட்ஸ் பாக்டரி.

மதுரைமா நகரில், முதல் முதல் ரோல் பிஸ்கட்ஸ் கம்பேனி ஸ்தாபித்து. இந்தியா. சிலோன், முழுவதும் நற்கியாதிவாய்ந்து அனேக டாக்டர்களாலும், கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களாலும், டாக்டர் லேடிஸ்களாலும். மானிட ஜென்மங்களாகிய நமக்கு. சுகாதாரத்துக்கு ஏற்றவான தென்று பரிசோதிக்கப்பட்டு, தங்கம் வெள்ளி மெடல்களும், அனேக சர்ட்டிபிகேட்களும் பரிசளிக்கப் பெற்ற ஆர். எம். எஸ். அன்ஸைன்ஸ் கம்பெனியாரால் தயாரிக்கப்படுகின்ற பெஸ்ட் இந்தியன் பிஸ்கட்ஸ்களை வாங்கி உபயோகியுங்கள்.

எங்கள் கம்பெனியில் தயாரிக்கப்படுகின்ற நயம் பிஸ்கட்ஸ்கள் ஆங்கிலேய சுகாதார முறைகளை அனுசரித்து, திரேகத்திற்கு புஷ்டியையும் பலத்தையும் கொடுக்கக்கூடிய அனேக விதமான எஸென்ஸ்களைச் சேர்த்து சிலை பிஸ்கட்ஸ்களுக்கு சமமாகத் தயாரிக்கப் படுவதினால். அனேக வியாபாரிகள் எங்கள் கம்பெனிக்கு ஏராளமான ஆடர்கள் கொடுத்து சரக்கு தருவித்து விற்பனை செய்து வருகிறார்கள். அவசியம் எங்கள்டிரேட் மார்க்கு "இஞ்ஜின்" போட்ட பிஸ்கட்ஸ்களை கவனித்து வாங்குங்கள். வேண்டுவோர் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதினால் விலை விபர ஜாப்தாவும் கேட்டாக்கும் இனாமாக அனுப்பப்படும். விலாசம்,

ஆர். எம். எஸ். அன்ஸைன்ஸ்
பெஸ்டு இந்தியன் பிஸ்கட் பாக்டரி,
புரோப்ரைட்டர், ராமச்சந்திரன். நற்பாளையத்தெரு மதுரை.

நாடார் பாங்கு லிமிட்டெட். தூத்துக்குடி,

கரண்ட் பிக்ஸட் டிபாஸிட், சேவிங்ஸ் பாங்க் கணக்குகள் வைக்கப்படும். வட்டிவிபரம் மனு செய்து தெரிந்துகொள்ளலாம். சரியானசெக்யூரிட்டியின் பேரில் கடன்களும், ரொக்க கிரடிட்டும் கொடுக்கப்படும். எக்ஸ் சேஞ்சு தொழிலும் நடத்தப்படும்.

## நாடார் மகாஜனங்களே!

நமதுகுல முன்னேற்றத்திற்கும் தற்கால நாகரீக நவீனகத்திற்கும். நமது சிறுவர் சிறுமிகள் பலரும் வாசிப்பதற்கும், எக்காலத்தும் நம்குலப் பெருமையை எடுத்துப் பேசுவதற்கும், இன்றியமையாத ஓர் இந்திரவிமானம் போன்றதும் சென்னை ச சு சங்கரலிங்க நாடார் எழுதியதுமான

நாடார் மகாஜன சங்கச், சங்கீத மஞ்சரி

என்னும் புஸ்தகத்தை வாங்கி வாசித்து மனனந்த மெய்துங்கள் புஸ்தகம் 1-க்கு விலை அணா 0-4-0 மொத்தமாக ஐந்து புஸ்தகம் தருவித்தால் வி பி மூலம் அனுப்பப்படும் ஐந்தணா தபால் ஸ்டாம்பு அனுப்பினால் ஒரு புஸ்தகம் புக்போஸ்டில் அனுப்புவோம் உடனே எழுதுங்கள்,

விலாசம்.-

தி. மா. ஐயாவு நாடார்,
பட்டன் பாக்டெரி & ஜெனரல் மெர்சண்ட்
வண்ணாரப்பேட்டை, சென்னை.

Printed and Published, By S. A. Muthu Nadar at Sri Muthumariamman Press Aruppukotta,

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection